திருக்குறளின்

தரிக்கோள்!

விவேகி

500
4E01

பொருள்.

எண்		பக்கம்
I	புதுவைப் பெரியார்	3
II	...அகவற்பா	7
1.	திருக்குறள் பிறப்பு	9
2.	திருக்குறள் வளர்ப்பு	11
3.	திருக்குறள் மறைப்பு	13
4.	திருக்குறள் மீட்ப்பு	18
5.	திருக்குறள் பொறுப்பு	21
6.	திருக்குறள் வெறுப்பு	29
7.	திருக்குறள் விருப்பு:	37
,,	(1) சமத்துவம்	42
,,	(2) சகோதரத்துவம்	43
,,	(3) தனியரசு	,,
,,	(4) தொழிலாளராட்சி	48
,,	(5) பொதுவுடைமை	50

புதுவைப் பெரியார்

ம. நோயேல்

புதுவைப் பெரியார்:

புதுவைப் பெரியார் உயர் திரு. ம. நோயேல் அவர்கள், தனித்தும் பற்பல சங்கங்களில் அங்கம் வகித்தும் புதுவையில் புரியாத பொதுத் தொண்டே இல்லை எனலாம்.

பழங்குடி மக்கள் பரம்பரையில் உதித்த அன்னார், இந்தியப் பிரதமர் பண்டித நேருவும் கண்டறியாச் சீர்திருத்தத் தொண்டினை எல்லாம் செயலளவில் செய்துகொண்டுள்ளார்,

"ஒழிக்கவேண்டும் – ஒழிக்க வழி செய்ய வேண்டும் சாதி வேற்றுமையை-மத வேற்றுமையை பழங்குடிகளுக்கு செய்யப் படும் கொடுமையை, மூட நம்பிக்கைக் கேடுகளை! இன்றேல், நாட்டின் நலிவு நீங்காது, முன்னேற முடியாது, நாகரீக உலகில் நம் நிலை கேலிக்கூத்தாகிவிடும்; அரசியல் அடிமைத்தனம் நீங்கினும், பொருளாதார – சமுதாய அடிமைத்தனம் நீங்கா விட்டால், நாம் மீண்டும் ஆட்சி அடிமைகளாகி விடுவோம்"

இந்த வாசகங்களை இந்தியத் தலைமை அமைச்சர் நேரு, தனக்குப் பொது மேடையில் 'பேச்சுக் கச்சேரி' புரியும் வாய்ப்புக் கிடைக்கும் போதெல்லாம் வாய் வலிக்க வலிக்க, வலியுறுத்தி வலியுறுத்திப் பேசித்திரிகிறார்.

கையில் ஆட்சியை வைத்துக் கொண்டிருக்கும் காங்கிரஸ் கட்சிக்கு இன்னும் வாய்ப் பேச்சு ஒழிந்த பாட்டைக் காணோம்! வாய்ப் பேச்சு ஒழிந்தாலன்றோ, பேச்செல்லாம் செயலாகும்? **"ஆயிரம் 'டன்' வார்த்தைகளை விட, அரை 'அவுன்ஸ்' செய்கையே மேல்"** என்று கூறிப் போந்தார், கரும வீரர் – காயிதே ஆஜம்-பாக்கிஸ்தான் தந்தை முஹம்மதலி ஜின்னா!

இந்தக் காங்கிரஸ் அரசாங்கம், சமுதாய சீர்திருத்தக்கொள்கைகளை வெறும் வாயளவில் பேசுவதாலோ - சட்ட ஏடுகளில் எழுதிவைத்துக் கொள்வதாலோ கருதிய பலன் கிடைத்துவிடும் என்றுஎண்ணிக்கொண்டு தீவிரமான - துணிச்சலான நடவடிக்கைகளைக் கைவிட்டுக் காலங் கடத்திக் கொண்டிருக்கிறது.

ஆனல், அறிவு வளமற்ற - ஆட்சி வசதியற்ற பொதுமக்கள் மௌடீகர்களாய் உற்ற அந்தக் காலம் 1930-ம் ஆண்டிலேயே புதுவை மக்களிடையே புகுந்து, சாதி மத வேற்றுமைகளையும், அதனல் பழங்குடி மக்களுக்கு ஏற்பட்ட கொடுமைகளையும், மூடப் பழக்க வழக்கங்களையும் எதிர்த்து ஒழிப்பதற்காகப் "புதுவை முரசு" எனும் ஒரு சிறந்த பத்திரிகையை ஆரம்பித்து, பகுத்தறிவுத் தந்தை பெரியார் ஈ. வெ. ரா. அவர்களின் ஈரோட்டுப் பாதையில் ஈடில்லா நடை போட்ட ஏந்தல் புதுவைப் பெரியார் நோயேல் அவர்களின் தொண்டினைப் பாராட்டாதார் பாண்டி மண்ணிலேயே எவரும் இல்லை.

எனினும், மக்களை மயக்கும் அபின் எனப்படும் மதத்தை விளம்பரம் செய்து வயிறு வளர்பதில் வல்லாராகிய புதுவை கத்தோலிக் கிறிஸ்தவப் பாதிரிகள் 18 பேர்களால் நமது புதுவைப் பெரியார் ம. நோயேல் அவர்களைப் பாராட்ட முடியாமல் போனதோடு, பகைத்துக் கொள்ளவும் நேர்ந்ததாம்!

அதனல், 1931-ம் ஆண்டில் அப்பாதகப் பாதிரிகள், நமது மதிப்பிற்குரிய பொது நலத் தொண்டராகிய புதுவைப் பெரியார் மீது வழக்குத் தொடுத்தனர்! தமது வண்டவாளங்களை எல்லாம் அம்பலப் படுத்திய "புதுவை முரசு" மீதும் போர் தொடுத்தனர்!!

அப்பொல்லாத பாதிரிகளுக்குச் சாதகமாகவே புதுவை நீதி மன்றங்கள் தீர்ப்பளித்தன. அதனல் தண்டனைக்குள்ளாகித் தமது மனைமாட்சி-செல்வ மெல்லாம் இழந்து சொல்லொன்ன இன்னலுக்கும் இடையூறுகளுக்கும், ஆளாகி இடறுற்றுக் கிடந்தபோது, நன்றி மறந்த நட்டாரும், தாழ்த்தப் பட்டாரும், புரட்சிப் பட்டம் பெற்ருருங்கூட, நன்றிகெட்டாரைப்போலவே கைவிட்டார்கள் புதுவை பெரியாரை!

என்ருலும், கொள்கையில் உறுதியும், தியாக உள்ளமும் ஒருங்கே கொண்டுள்ள நமது புதுவை பெரியார், அத்துணை இன்னல்களையும் சகித்துக்கொண்டு, மேலும் மேலும், புதுவைப் பழங்குடி மக்களின் விடுதலைக்கும், முன்னேற்றத்திற்கும் உழைப்பதில் ஒரு சிறிதும் மனம் சலியாதவராகவே விளங்கியுள்ளார்கள். அத்தோடு புதுவை நீதி மன்றங்கள் தமக்கு வழங்கிய அநீதியாண தீர்ப்பை எதிர்த்து மேலை நாட்டு பாரிஸ் 'கசாசியம்' நீதி மன்றத்திற்கு அறிக்கையும் செய்துள்ளார்கள்.

உலகிலேயே முதன் முறையாகப் புரட்சிக்கு வழி காட்டிய 'பிரான்சு' தேசத்தின் தலை நகரமாகிய 'பாரிஸ்' நீதி மன்றம், புதுவைப் பெரியார் ம. நோயேல் அவர்களின் சமூக சீர்திருத்தத் தொண்டிற்கும் தலைவணங்கி மதிப்பளிப்பது போல், நல்ல தீர்ப்பு வழங்கி, 1932-ம் ஆண்டிலே அன்ருருக்கு வெற்றி மாலையும் சூட்டிற்று.

1940-ம் ஆண்டு புதுவை சட்டசபை 'லோக்கல் கவுன்சிலராக' நமது புதுவைப் பெரியார் ம. நோயேல் அவர்கள் அங்கம் வகித்தபோதுதான், அவர்களுடைய முயற்சியினால் புதுவையில் ஆண் மாணுக்கர்களுக்கும் ஒரு தமிழ்கல்லூரி ஏற்படுத்த முடிந்துள்ளது என்பதும் குறிப்பிட தக்கதாகும்.

ஆகவே, நமது புதுவைப் பெரியார் ம. நோயேல் அவர்களுடைய வாழ்வு முழுவதுமே புதுவைப் பொது மக்களுக்கும் பழங்குடி மக்களுக்கும் தொண்டு செய்வதிலேயே கழிந்துள்ளது எனலாம்! அவற்றைப் புதுவைப் பிரான்சு அரசாங்கமே ஓரளவு உணர்ந்துள்ளதற்கு அறிகுறியாக அவர்களுக்குப் பற்பல பிரான்சுப் பட்டங்களும் - பதக்கங்களும் வழங்கியுள்ளது என்பதும் நன்கு சுட்டிக்காட்டத்தக்கவையாகும்

''தன்மான இயக்கத்தின்'' தனிக் கிளையாகப் புதுவையில் விளங்கும் புதுவைப் பெரியார் ம. நோயேல் அவர்களே புதுவைக்குத் ''திராவிட கிளைக் கழகமும்'' ஆவார்கள். அவருடைய மனையே கிளைக் கழகத்தின் அலுவலகமும், மனைவி - மக்கள் - மருமக்கள் குழந்தை குட்டிகளே அவ்வலுவலகத் தொண்டர்களாகவும் திகழ்வதைக் கண்டு பூரிப்படையாத திராவிட கழகப் பிரமுகர்களோ - பிரசாரகர்களோ இல்லை என்றே கூறிவிடலாம் என்றால், இதற்கு மேலும் அப்பெரும் புகழ் படைத்தும் 'நிறை குடம் போல்' அலம்பாதிருக்கும் நீர்மைப் பொறை சான்ற புதுவைப் பெரியார் ம. நோயேல் அவர்களின் புகழினை எழுதவும் வேண்டுமோ ?

இந்நூல் நம் விவேகி அவர்களின் பனிரெண்டாவது முயற்சியாகும். இப்போது இதற்குரிய அச்சகச் செலவினை அன்புகூர்ந்து ஏற்றருளியவரும் இந்நூலை வெளியிடுபவரும் நமது அருமைப் புதுவைப் பெரியார் உயர் திரு. **ம. நோயேல்** அவர்களே ஆவார்கள் என்பதையும் மிக்க மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கின்றோம். மேலும், புரட்சிக்கவி பாரதிதாசனால் இயற்றப்பட்ட ''தாழ்த்தப்பட்டார் சமத்துவம்'', ''சஞ்சீவிப் பருவதத்தின் சாரல்,'' ''சுயமரியாதைச் சுடர்'' ஆகிய நூல்களை 1930-31-ம் ஆண்டுகளில் வெளியிட்டவரும் நமது புதுவைப் பெரியார் மா. நோயேலேயாவார்கள்.

''செயற்கரிய செய்வார் பெரியர்; சிறியர்
செயற்கரிய செய்கலா தார்.'' [திருக்குறள்]

O. M. H. BROTHERS,

Hardware, Paints & General Merchants.

15, KATCHERY ROAD,

MYLAPORE :: MADRAS-4.

எங்களிடம்:

* வீல் வால்வு, கேட் வால்வு, பெண்ட், கப்ளிங், எல்போ, யூனியன், பேரல் நிப்பல், சவர், பேஜன்கார்ட், சாதா, ஸ்குருடாரம்டாப், பித்தளை கார்க், ஆகிய பைப் சாமான்களும், மாயா பம்பு வகைகளும் சகாயமான விலையில் கிடைக்கும்.

* மற்றும், சகலவிதமான இரும்பு சாமான்களும், கோபி, காவி, நீலம், டிஸ்டம்பர் முதலிய கலவைப் பொருள்களும், உயர்தரமான வர்ண வகைகளும், டார்ப்பன்டயன், லின்ஸ்ட் ஆயில், பெயின்ட் ஆயில், கோபால் வார்னீஸ் முதலியவைகளும் மேன்மையானதாயும், மலிவானதாயும் கிடைக்கும்.

: விவரங்களுக்கு :

ஓ. எம். எச். பிரதர்ஸ்,

இரும்பு, வர்ண, ஜெனரல் வியாபாரம்,

15, கச்சேரி ரோடு, மைலாப்பூர், சென்னை-4.

புரட்சிக் கவி பாரதிதாசன்

அவர்களின்

புரட்சிகரமான அகவற்பா :

தமிழை மாய்க்கவும் தமிழரைத் தாழ்த்தவும்
தமிழர் நாட்டைத் தம்நா டாக்கவும்

ஆரியர் அந்நாள் தொடங்கி இந்நாள்
வரைக்கும் செய்யும் சூழ்ச்சிகள் மதிப்பில.

அவற்றிலிங்கு ஒன்றை அறிவித் துதவினர்
புனைபெயர் 'விவேகி' எனுமோர் புலவர்

இனிதில் அவர்தாம் இயற்றிய நூற்பெயர்
'திருக்குறளின் குறிக்கோள்' எனச் செப்புவர்.

மிடுக்கிலா ஆரிய முடிச்சுமா றிகளின்
குறும்போக்கு விளக்கமே திருக்குறட் குறிக்கோள்

இயற்றினோர் விவேகி என்பவர், தமிழர்
அயர்ச்சிக்கு நல்லதோர் மருந்தே அளித்தார்.

இந்நூலைச் செந்தமிழ் மக்கள் பால்
தாயினும் அன்புடை நோயேல் என்பார்

"தாழ்த்தப் பட்டார் சமத்துவப் பாட்டை"முன்
வெளியிட்டது போல் வெளியிட் டருளினர்.

தமிழர் என்பவர் எவரும்
அமிழ்தென அள்ளி அள்ளி அருந்தவே.

புதுவை
9—5—'56

பாரதிதாசன்

திருக்குறளின்

குறிக்கோள்!

'விவேகி'

1. திருக்குறள் பிறப்பு:

இன்றைக்குச் சுமார் இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்னர் உள்ள கடைச்சங்க காலத்திலே பிறந்தது "திருக்குறள்" என்னும் பகுத்தறிவு நூல் என்பது அநேகமாய் எல்லாத் தமிழ் புலவர்களாலும் ஏகமனதாய் ஒப்பக்கூடிய ஒன்ருகும்.

"திருக்குறள்" ஆசிரியர் பெயரைத் திருவள்ளுவர் என்று கேட்டோமே அன்றி, அவர் வரலாற்றினைக் காணும் வாய்ப்பினைப் பெற அவ்வாசிரியரே விரும்பாதவர் போல், தனது நூலினை மட்டுமே விட்டுச் சென்றுளார்.

> "எப்பொருள் எத்தன்மைத்து ஆயினும் அப்பொருள்
> மெய்ப்பொருள் காண்பது அறிவு" என்றும்,
>
> "எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
> மெய்ப்பொருள் காண்பது அறிவு" என்றும்,

கூறப்பட்டுள்ள அவருடைய குறள் நெறிக்கு அவரே ஒரு எடுத்துக்காட்டாக தன்னைத்தானே மறைத்துக் கொண்டாரோ, அல்லது பிற்காலத்தில் அவருடைய பகுத்தறிவு பிரசார நூலாகிய திருக்குறளை, மூடமத வெறியர்களாகிய பார்ப்பனர்கள் மூடி மறைத்துவிட முயன்றதுபோல், முயன்றவர் வெற்றி பெற்றுவிட்டனரோ என்பதும் ஆராய்ச்சியாளரின் ஐயப்பாட்டிற்கு உரிய பிரச்சினையாகும்.

திருக்குறள் நூலினை நுணுகி ஆராய்ந்து பார்த்தால், அந்நூல் கடுமையான எதிர்ப்புக்கு இடையிலே பிறந்து, எதிர்நீச்சல் புரிந்து வெற்றியடைந்ததால் நிலைத்துவிட்ட ஒரு மாபெரும் அறிவாற்றல் மிக்க நூலாகும் என்பது எளிதில் எவருக்கும் புலனுகும்.

திருக்குறளின் பிறப்பு, ரிக்-யஜுர்-சாம-அதர்வண வேதங்களுக்கு இறப்பும், மனுநீதி தர்ம சாஸ்திரங்கள் - இதிகாசங்கள் ஆகியவற்றிற்குச் சாவு மணியும் ஆயிற்று.

"வள்ளுவர்செய் திருக்குறளை
வழுவறநன் குணர்ந்தோர்
உள்ளுவரோ மனுவாதி
ஒருகுலத்துக் கொரு நீதி"

என்று புலவர்கள் புகழ்ந்து பாடினர். எல்லோர்க்கும் பொதுமறை என்று மற்றெல்லோரும் ஏற்றுக்கொண்டபோதிலும், ஆரியப் பார்ப்பன வேதியர் மட்டுமே திருக்குறளுக்குப் புதை குழி தோண்டுவதற்குரிய சமய சந்தர்ப்பத்தை எதிர்பார்த்து ஏங்கிக் கிடந்தனர்.

வேதியர்கள் மூடிமூடி வைத்திருந்த நான்மறைகளும் தமிழர் தமக்கு வேண்டாம் என்றதன் எதிரொலியே பார்ப்பனப் பண்டிதர்களின் உள்ளங்களில் உதித்த 'உபநிடதங்களாம்!'

வேதியர் தம் வேதங்களின் வண்டவாளங்கள் வெளிப்பட்டால், அவை ஆற்றலிற் குறையுமென அஞ்சியே மறையாக வைக்கப்பட்டவை அல்லவோ? திருக்குறளோ வெளிப்படையானது. அதைப் பயிலப் பயில பயில்வோர்தம் ஆற்றலில் ஏற்றம் பெற்று கல்வி ஏறுபோல் வீறு நடை கொள்வரன்றோ?

திருக்குறள் நூலொன்று கற்றாலே போதும்! அதைக் கற்றவர் தமிழைக் கற்றவராவார் - உலகத்தைக் கற்றவராவார் - உண்மையைக் கற்றவராவார் - நன்மையைக் கற்றவராவார்!! மற்றெந்நூல் கற்றோரும் ஏதும் கல்லாதவரே!!! என்று புலவர்கள் எல்லோரும் ஏகமனதாய்க் கூறிவிட்டனர்.

திருக்குறள் கற்பதற்குத் தீட்சை வேண்டாம்; தீண்டாமை வேண்டாம்; உயர் பிறவி வேண்டாம்; புரோகிதத் தரகர் வேண்டாம்; புல்லர் வேண்டாம்; இடையில் ஒரு குருவும் வேண்டாம்; குலங் கோத்திரமும் வேண்டாம்.

எளிய தமிழ் நடையில், எல்லோரும் எளிதில் கற்றுத் தேரத் தக்க முறையில், எவர் மதமும் தழுவாது, எம்மதத்தாரும் சம்மதமாய்ப் பயிலத் தக்க விதமாக-விளக்கமாக-வெள்ளைக்குறட்பாவாகப் பாடிய வள்ளுவப் புலவரே புலவர் என்று வாயார வாழ்த்தினர் தமிழ் மக்கள்.

ஆரியப் பார்ப்பனர்கள் ஒரு குலத்துக்கு ஒரு நீதி வகுத்துச் சாதிப் பிரிவினை செய்தனர்! அதைத் தமிழ் மக்கள் வெறுத்துத் தள்ளுமாறு திருக்குறளில் ஒன்றே குலம்-ஒன்றே நீதி என்றார் திருவள்ளுவர்!! நன்றே என்று அன்றையத் தமிழ் மக்கள் இதை ஏற்று நிலை நாட்டினர்; இன்றையத் தமிழ் மக்களும் இதை ஏற்று நிலை நாட்டும் ஆரிய எதிர்ப்புப் போர் முரசு கொட்டுகின்றனர்!!!

ஆனால், ஆரிய வேதங்களின் நிலை என்ன? அதன் வண்டவாளங்கள் வெளிப்படா முன்னர் முற்கால மூடர்கள் பலர் அவைகளைப் போற்றினர். இன்று இன்னும் ஆரிய மாய்கையிலிருந்து மீளாத சில அப்பிராணிகள் மட்டுமே போற்றுகின்றனர்; நாளையோ அவைகளைப் போற்றுவாரே இருக்கமாட்டார்கள்.

2. திருக்குறள் வளர்ப்பு.

திருக்குறள் நூல் அரங்கேற்றம் பெறவும் மற்றெல்லாச் சங்க நூல்களுமே மதிப்பிழந்து போயின!

முக்கியமாக மதசார்புடைய புராண இலக்கியங்கள் எல்லாம் முக்காடிட்டு மூலையில் தள்ளப்பட்டன.

"மாடுகளும் வழக்கத்தால் செக்கைச் சுற்றும்; மடையர்களும் இயற்றுவர் கடவுட் பாடல்" என்னும் புரட்சிக் கவிஞர் பாரதிதாசனின் கருத்துக்கு ஏற்ப இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பிருந்த தமிழகம் பகுத்தறிவு சார்பற்ற நூல்களை எல்லாம் புறக்கணித்து விட்டுத் திருக்குறள் ஒன்றினையே தேர்ந்தெடுத்திருந்தது என்பது தெற்றென விளங்குகின்றது.

> "ஆயிரத்து முந்நூற்று முப்ப தருங்குறளும்
> பாயிரத்தி னோடு பகர்ந்ததற்பின் - போயொருத்தர்
> வாய்க்கேட்க நூலுளவோ மன்னு தமிழ்ப்புலவ
> ராய்க்கேட்க வீற்றிருக்க லாம்."

என்று இயம்பிய நத்தத்தனார் வெண்பாட்படித் தமிழகத்தில் திருக்குறள் அறிவு வளர்ந்து திகழ்ந்தது.

திருக்குறள் நூலினுள்ளும் வெறெந்த நூலின் சொல்லோ, எடுத்துக் காட்டோ இடம் பெற்றிருக்கவில்லை. ஆனால், திருக்குறள் நூலோ நக்கீரனார், சாத்தனார் முதலான நல்லிசைப் புலவர்களாலும், கம்பர், திருத்தக்க தேவர் முதலிய புராண மரியாதைக் காரர்களாலும் எழுதப் பட்ட நூல்களில் எல்லாங்கூடப் பெருமையோடு அருமையாக இடம் பெற்றுள்ளது.

திருக்குறட் பாக்களேயும், அதன் அரிய கருத்தாழம் உள்ள சொற் களேயும் தத்தமது நூற்களில் எடுத்தெழுதாத தமிழ் புலவரே தமிழகத்தில் இருந்ததில்லை! எனவே தான்:-

"ஒன்றே பொருளெனின் வேறென்ப வேறெனின்
அன்றென்ப ஆறு சமயத்தார் — நன்றென
எப்பா லவரும் இயைபவே வள்ளுவனர்
முப்பான் மொழிந்த மொழி.'' என்று

கல்லாடரும் கல்மேலிட்ட எழுத்தெனத் தெள்ளிதாய் விளக்கியுள்ளார்.

பகுத்தறிவு ஒன்றுதான் உண்மையை அறிவதற்கான ஒரே ஒரு சாதனமாகும்! அந்தச் சாதனத்தை உடைய ஒரே ஒரு நூல் அக்காலத் தில் திருக்குறள் ஒன்றுதான்!! அத்தகைய திருக்குறள் அறிவின் வளர்ச் சிக்குத்தான் ஆரிய மத வெறியர்களாகிய பார்ப்பனர்கள் அன்றும் இன்றும் முட்டுக்கட்டைகளாய் உள்ளனர்!!!

"இரந்தும் உயிர் வாழ்தல் வேண்டின் பரந்து
கெடுக உலகியற்றி யான்''

என்னும் குறள், திருக்குறள் நூலின் பகுத்தறிவு வளர்ச்சிக்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகும்!

"I do not belive in a God who can not give me bread here giving me eternal bliss in heaven"

'மண்ணுலகில் உணவளிக்க இயலாத ஒரு கடவுள், விண் ணுலகில் நிலையான இன்பத்தை நல்கும் எனின், அத்தகைய கடவுளை நான் நம்பமாட்டேன்' என்று பகுத்தறிவுக் கண்ணேட் டத்தோடு உலகை ஆராய்ந்து பார்த்த சுவாமி விவேகானந்தரும் ஒரு சமயம் கூறினராம்!

ஆனல், இத்தகைய பொருளியல் அறிவு வளர்ச்சியைப் பொல்லாத மதவாதிகள் எல்லோருமே ஒருமுகமாக எதிர்க்கின்றனரே! ஏன்?

மதவாதிகள் தம் கற்பனைக் கடவுளுக்கும், மாந்தருக்கும் இணைக் கப்பட்டுள்ள கற்பனைக் கதைகளைப் பற்றிய பேதமையை உள்ள படியே ஆஸ்திகர்களால் உணர முடியவில்லை. அது கேவலம் வெறும் மனேராட்சியக் கோட்பாடாகவே இருந்து வருகிறது என்பது மூட பக்தியில் மூழ்கிக்கிடக்கும் அவர்களுக்கு எப்படி புரியும்?

கடவுள் என்ற எண்ணத்திற்கும் மாந்தர்க்கும் தொடர்பு கற்பித்த மதங்கள் எல்லாம், மாந்தர் இனம் தமக்குள் ஒருவருக்கொருவர் கொண்டுள்ள பரஸ்பரத் தொடர்பையே சிதைத்துச் சீர்குலைத்து விட்டனவே!

இதனாலன்றோ, (The blood of the mertyrs is the seed of the Church) "வதைக்கப்பட்டோரின் இரத்தமே கடவுளுடைய - கர்த்தருடைய - *அல்லாஹ்வுடைய ஆலயத்தின் அஸ்திவாரம்" என்ற பொன் மொழியும், **"கோவில்களெல்லாம் குச்சுக்காரிகளின் விடுதிகள்"** என்ற காந்தி மொழியும் வெளியாகி உள்ளன.

இத்தகைய பகுத்தறிவுக் கருத்தையே இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே வெளியிட்டு விஞ்ஞான அறிவை வளரச்செய்யும் திருக்குறள் அறிவு வளர்ச்சியை தமிழ் மக்கள் பெறமுடியாமல் தடுத்தாலொழிய, இனி எப்படிப்பட்ட மதவாதிகளாலும்-கடவுள் பக்தராலும் கடவுள் காப்பாளர்களாலும் ஆஸ்திகப் பித்தலாட்டங்களைக் காப்பாற்ற முடியாது என்ற ஈன நிலை ஏற்பட்டுவிட்டதால், திருக்குறள் நூலை மறைத்து அழித்துவிடக் கங்கணம் கட்டினர் கயவர்கள்.

3. திருக்குறள் மறைப்பு:

திருக்குறள் அறிவை மறைப்பதற்கு ஆரியப் பார்ப்பனப் பண்டிதர்கள் எடுத்துக்கொண்ட முதல் நடவடிக்கைதான் மொழி பிரச்சினை!

மொழித்துறையிலே, கலைத் துறையிலே, சமுதாயத்துறையிலே ஆரியப் பார்ப்பனச் சமஸ்கிருதப் பண்டிதர்களின் ஊடுருவல் தொடக்கமானது **அகஸ்தியர்** காலத்தில் என்று சரித்திரம் சான்று பகர்கிறது.

அன்று தொட்டு ஒவ்வொரு தலைமுறையிலும் ஆரியப் பார்பனச் சமஸ்கிருதப் பண்டிதர்களுக்கும், தமிழ்ப் புலவர்களுக்கும் இடையில் ஏராளமான எதிர்ப்புகளும், சச்சரவுகளும், சமய சந்தர்ப்பத்திற்குத் தக்க சரணாகதிகளும் அவ்வப்போது ஏற்பட்டுள்ளன.

அவற்றை எல்லாம் ஆரியரின் வேத - புராணங்களிலேயே விளக்கமாகக் காணலாம். ஆரிய இதிகாசங்கள் எனப்படும் இராமாயணம்-மகாபாரதம் மற்றுமுள்ள கட்டுக்கதைகள் அனைத்துமே ஆரியப் பார்ப்பனர்களுக்கும், திராவிடர் அல்லது தமிழ் மக்களுக்கும் இடையில் ஏற்பட்ட சண்டை சச்சரவுகளை மிகைப்படுத்திக் கூறப்பட்டவைகளே ஆகும்.

---

* "இரத்தத்தை பூமியில் ஓட்டாத வரையில் (எதிரிகளை) சிறை பிடிப்பது எந்த நபிக்கும் தகுமானதல்ல........" [குர்-ஆன் 8 : 67]

இந்த உண்மையைச் சரித்திர ஆராய்ச்சியாளர்களிற் பலரும் ஆராய்ந்து அறிந்து வெளியிட்டது போலவே, காஷ்மீர் பார்ப்பனப் பண்டிதராகிய நேருவுங்கூட ஒப்புக்கொண்டு ஒரு நூல் எழுதி வெளியிட்டுள்ளார்.

ஆகவே, சமஸ்கிருத மொழிக்கு அதிகச் சிறப்பு உண்டாகும்படி சூழ்ச்சி செய்து தற்காலிகமான வெற்றியடைந்த ஆரியப் பார்ப்பனப் பண்டிதர்கள் காலத்தில்த்தான் தமிழ்மொழி சிறப்பிழந்தும், அம்மொழி வழிவந்த திருக்குறள் சீந்துவாரற்றும், திருக்குறள் அறிவு வளர்ச்சி குன்றி மறைந்தும் போகும்படி செய்யப்பட்டிருக்க வேண்டும்.

அந்நிலையை நம் மனக் கண்முன் கொண்டுவருவதற்கு ஆதாரமாக கீழ்கண்ட கவி ஒன்று கிடைத்துள்ளது;

"மாறிடத்துலவு வேற்படை வஞ்சி
மன்னவா செந்தமிழ் மயில்யாம்
கூறு மூவேந்தர் திருமுடி துலங்கக்
குலவினேம். நின் குலத் தொருவன்
ஆறு சேர் சடையான் அவைமுன் நம்மை
அணி செய்தான். ஆரியப்பொதுப் பெண்
சீறு மென்றுணர்ந்தாய் நீயிவண் மதியாய்
திருமுனி மலைய மேகுது மே."

சுமார் இருநூறு ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த தமிழ்நாட்டுத் தம்பிரான் ஒருவர் சேரநாடு சென்று, அங்குள்ள ஆரியதாசனை ஒரு மன்னனின் நிலைமையைப் பற்றிப் பாடிய பாடலிது என்று மகாமகோபாத்தியாயர் உ. வே. சாமிநாதய்யர் எழுதிய **"நான் கண்டதும் கேட்டதும்"** என்ற நூலிலே வெளியிட்டுள்ளார்.

ஆகவே, ஆரியப் பொதுப்பெண் அல்லது சமஸ்கிருத வேசியின் மோகத்திலே, கன்னித் தமிழைச் சிலகாலம் இத்தமிழகம் கைவிட்டிருந்திருக்கலாம் என்பது புலனுகிறது!

அத்தகைய சிறிய இடைக் காலங்களிலேதான் திருக்குறள் அறிவு மறைக்கப்பட்டுத் திருடர்களாகிய பார்பனப் புரோகிதப் பண்டிதர்களின் பொய்யுரைகளெனும் மூடமத புராண நச்சுக்கொள்கைகள் தமிழகத்தில் நிலை நாட்டப்பட்டிருக்கவேண்டுமே ஒழிய, மற்றப்படித் தமிழகம் எப்போதுமே மதப் பண்புடைய நாடாக இருந்ததே இல்லை.

மதசார்பற்ற-பகுத்தறிவுப் பண்பாடுடையதே பண்டைத் தமிழகம் என்பதற்கு ஆதாரமாகவேதான், பார்ப்பனப் புராண இதிகாச வேதங்கள் எனப்படும் குப்பைகூழங்களுக்கு எப்போதும் தமிழகத்தில் எதிர்ப்பிருந்து கொண்டே இருப்பதை அன்றும், இன்றும் ஒன்று போலவே காண்கின்றோம்.

ஆரிய வேத மதக் கலாச்சார வரலாற்றில், எப்போதும் ஆரிய ரிஷிகளுக்கும், புரோகிதர்களுக்கும், சமஸ்கிருதப் பண்டிதர்களுக்கும் தமிழகத்தில் எதிர்ப்புகளிருந்துகொண்டேதான் இருந்தன என்பவைபற்றி ஆங்காங்கே விளக்கமாக கூறப்பட்டுள்ளன.

மாபெரும் அறிவியல் வீரர்களான ஜாவாலா - பிரகஸ்பதி ஆகியவர்களால் துவக்க காலத்திலும், சிறந்த விஞ்ஞானிகளான சாங்கியர்கள்-சார்வாகர்களால் பிற்காலத்திலும் ஆரிய மூடமத வேதக் கொள்கைகளுக்கு எதிர்ப்பளிக்கப்பட்டன.

வேத மந்திர சுலோகங்களில் மிகவும் கேவலமான வரலாறுகளும் உதாரணங்களும், தூற்றுதல்களும் நிறைந்துள்ளன. அவற்றில் வரும் ரிஷிகள், சாதுக்கள் என்பவர்கள், தங்களை எதிர்ப்பவர்கள் மீது ஆபாசமான வசைச் சொற்களைப் பொழிந்து வைத்துள்ளனர். அக்காட்டுமிராண்டிகள் உபயோகித்த வசைமொழிகளில் முக்கியமானவை, அரக்கன் அசுரன், இராட்சதன், காமுகன், இரத்த வெறியன் என்பனவாம். இப்போது நம் காலச் சீர்திருத்தச் செம்மல்களையும், தலைவர்களையும் மதவெறியர்கள் எப்படித் திட்டுகிறார்களோ, அப்படிப்பட்டவையே அந்த வசைச் சொற்களாகிய வேத மந்திரங்களும் என்பதைத் தவிர வேறில்லை.

மத நம்பிக்கையற்ற பகுத்தறிவு வாதிகளின் சரமாரியான கேள்விகளுக்குப் பதில் அளிக்க முடியாமல், ஆத்திரமடைந்த ஆரியப் பார்ப்பனப் பண்டிதர்களே, அவ்வாறான வசை மொழிகளைச் சமஸ்கிருத வேத சுலோகங்களாகப் பாடித் தள்ளிவிட்டனர் என்பது, எல்லோராலும் இப்போது ஒப்புக்கொள்ளக் கூடியதாகி விட்டது.

அப்போதே, அந்த இரகசியத்தை அறிந்த தமிழ்ப் புலவர்களில் பலர் அத்தகைய ஆரியமாய்கையையும், மத ஆதிக்கத்தையும், சமஸ்கிருத மொழியையும் எதிர்க்கத் தங்களால் ஆனமட்டும் முயன்றே இருக்கின்றனர் என்பதற்கும் போதிய ஆதாரங்கள் உள்ளன.

தமிழகக் கோயில்களிலே ஆரியப் புரோகித எதிர்ப்பு, ஆரிய மொழி மந்திர எதிர்ப்பு ஆகியவற்றை முதன்முதல் துவக்கி வைத்தவர் திருமங்கை மன்னன் என்பவராவார்.

அதற்குரிய ஆதாரம் பன்னிரு ஆழ்வார்கள் பாடல் தொகுப்பான **'நாலாயிரப் பிரபந்தத்தின்''** முகவுரையிலேயே காணலாம்;

"திருமங்கையாழ்வார், ஸ்ரீரங்கம் கோயிலிலே தமிழில் வழிபாடு செய்ய வேண்டும் என்று வற்புறுத்தினர். அர்ச்சகர்கள் எதிர்த்தனர். இந்த சச்சரவு வலுத்தது. இறுதியில், தமிழ்ப்பாடல் வழிபாடு முறைக்கு முதலிடமும், சமஸ்கிருதம் மந்திர பாராயணங்களுக்கு அடுத்த இடமும் தரப்படுவதாக உடன்பாடு ஏற்பட்டது'' என்று எழுதப் பட்டுள்ளது.

இதிலிருந்து என்ன தெரிகிறது? சமஸ்கிருத மொழி மந்திரங்களை அடியோடு ஒழித்துக்கட்ட வேண்டுமானால் - ஆரிய வேதம் ஆரியப் புரோகிதம் ஆகிய மூட முறைகளை வேரோடு பிடுங்கி எறிய வேண்டுமானால், அவை எப்படித் தமிழை மதிப்பிழக்கச் செய்து தேவக் கலைகளாகத் தலைஎடுத்தனவோ, அப்படியேதான் தமிழையும், தமிழ் கலைகளையும் மீண்டும் புத்துயிர் பெறச்செய்ய வேண்டியதாய் இருந்தது.

சமஸ்கிருத நூல்கள் தெய்வீகமோ-தெய்வசாதனையோ அல்ல என்று நிருபிப்பதற்காகவே, தமிழ்ப் புலவர்களும் மூடப் பக்தியை விளக்கும் ஆயிரக்கணக்கான தமிழ்ப் பாடல்களையும் போட்டிக்குப் பாடித் தொலைத்துள்ளனர்! என்றாலும், அவற்றில் ஆரிய வேதக் கருத்துக்களை விரட்டியடிக்கும் தன்மையும், அறிவியல், சமுதாயக் கலையில், பொருளியல் இயற்கையியல், மருத்துவக் கலையியல் ஆகிய அரிய கருத்துக் களையும், மக்களுக்குப் பயன்படும் வண்ணம் வைத்துப் பாடியுள்ளனர் என்பதும் நுணுகி ஆராய்வோர்க்கு எளிதில் புலனாகும்.

மேற்குறிப்பிட்ட ஆழ்வார்களிலும், நாயன்மார்களிலும் பார்ப்பனப் பண்டிதர்களும் பலர் உள்ளனர்! அவர்கள் பாடல்கள் எல்லாம் ஆரிய மூடவேதக்கருத்துக்களைத் தமிழ் மொழியில் பரப்பமட்டுமேதான் பயன் படுபவைகளாய் உள்ளன என்பதைப் பெரியாழ்வார், ஆண்டாள் போன்ற பார்ப்பன ஆழ்வார்கள் பாடிய பாடல்களில் உள்ள பாகவதம்- இராமாயணம் - பாரத வரலாறுகளில் இருந்தே உணர்ந்து கொள்ளலாம்.

வேதம் தெய்வ வாக்கு என்றனர் ஆரியப் பார்ப்பனப் பண்டிதர்கள்; தமிழ் ஆழ்வார்களோ, அதற்கு எதிர்ப்பாக 'திருமொழி', 'திருவாய்மொழி களை' இயற்றினர்!

வேத மந்திரத்திலே உள்ள காமக் கலைக்கு எதிர்ப்பாக, **'நாயக - நாயகி பாவப்பாடல்'** களை இயற்றினர் ஆழ்வார்கள்!!

"கல்லிலும் செம்பிலுமோ இருப்பார் கடவுள்" என்று பாடிய **சிவவாக்கியர்** ஆரியவேதங்களின் ஆழத்தைக் கணித்து அறிந்தவரே தான்! அவ்வேதங்களின் வண்டவாளங்களைப் பச்சை பச்சையாகக் கண்டித்துப் பாடல்கள் பல இயற்றிச் சிலைவணக்கம், புராணப் புளுகுகள், சமஸ்கிருத மந்திரப் பித்தலாட்டங்கள் ஆகியவற்றின் குட்டை உடைத்து அம்பலப் படுத்தியவரேதான்!!

என்றாலும், தமிழ் மன்னர்களிற் பலரை அவ்வப்போது ஆரிய மாய்கை தம் வயப்படுத்திக்கொண்டு, செத்த சமஸ்கிருத ஆதிக்கத்திற்கே அதிகச் செல்வாக்கை உண்டாக்கிப் பகுத்தறிவுத் தமிழைத் தாழ்த்திப் பாழ்படுத்திச் சிதைத்துச் சின்னாபின்னம் ஆக்கிவிடப் பெரும் பிரயத்தனங்கள் பல செய்திருக்கின்றன.

அம்மாதிரியான சூழ்ச்சிக்குக் கருவியாக உபயோகப்படுத்தப் பட்டவர்களில் ஒருவனாகிய குயக்கொண்டனை, **நக்கீரர்** எனும் தமிழ் புலவர்:

"ஆரியம் நன்று தமிழ்தீ தெனவுரைத்த
காரியத்தாற் காலக்கோட் பட்டானை......"

என்று பாடிய பாடலிலிருந்து, கொலையே செய்து விட்டார் என்றுகூடத் தெரிகிறதல்லவா?

ஆயினும், ஆரிய மதம், தமிழ் மக்களுடைய அறிவை மயக்குவதில் 'அபினை' விடக் கொடிய வேகம் உடையதாய் இருக்கின்றமையால், பிற்காலத்தில் மறுபடியும் சமஸ்கிருதமே முதலிடம் பெறச் செய்யப்பட்டு 'தமிழ்மொழிவழிபாடு' முறைகூடப் பின்னணிக்குத் தள்ளப்பட்டுப் போயின என்றால், தமிழ்ப் பகுத்தறிவு நூலாகிய திருக்குறள் எங்ஙனம் தலைகாட்ட இயலும்? அத்தகைய சூழ்நிலைகளை உடைய காலங்களில் தமிழகத்தில் திருக்குறள் அறிவுக்குத் திரையிடப்பட்டே இருந்திருக்க வேண்டுமல்லவா?

மேலும், சமஸ்கிருதப் பார்ப்பனப் பண்டிதர்களாகிய இராமாநுஜ ஆச்சாரியார், சங்கராச்சாரியார் முதலியோர்களும் தோன்றி, ஆரியப் புரோகித மதத்திற்கும், வேத புராணங்களுக்கும், சமஸ்கிருத மொழிக்கும் மீண்டும் புத்துயிர் கொடுத்திருக்கின்றனர்.

எப்படி எனில், அதேமொழி பிரச்சினை மூலந்தான்! அஃதாவது, தமிழும் சமஸ்கிருதமும் கலந்த 'மணிப்பிரவள' நடை என்பதாக ஒரு இருபிறப்புக் கதம்ப மொழியைக் கற்பித்துத் தனித் தமிழ்மொழி உணர்ச்சியையே அறவே ஒழித்துக் கட்டி, தமிழ் மூலம் கிடைக்கும் ஓரளவு பகுத்தறிவு வளர்ச்சியையும் ஒட்டு மொத்தமாக ஒழித்துவிட்டனர்.

"ஒரு நாட்டை அடிமைப்படுத்தி ஆளவேண்டுமானால், முதலில் அந்நாட்டு மொழியைத் தாழ்த்திவிட்டு, ஆளுபவன் தன் மொழியை ஆதிக்கம் புரியச் செய்யவேண்டும்" என்பது ஒரு ஆங்கிலப் பலமொழி. அதன்படியே, ஒரு சிறந்த பகுத்தறிவு நூலாகிய திருக்குறளை மறைத்து விடுவதற்காகப் பகுத்தறிவுக்குப் பரம விரோதிகளாகிய பார்ப்பனப் புரோகிதர்கள், அந்நூலின் உயிர்நாடியாகிய தமிழ்மொழியையே தாழ்த்தி ஒழித்துவிட முயன்றுள்ளனர்.

4. திருக்குறள் மீட்பு:

அறிவு விருத்தியற்ற நிலையிலிருந்த மாந்தர், சற்று விருத்தியடைந்து காட்டு மிராண்டித்தனத்திலிருந்து மீண்டதுமே மரம், கல் வணக்கத்தில் நம்பிக்கை இழந்து, பேய் பிசாசுக் கற்பனையிலீடுபட்டனர்.

பின்னர், பேய் பிசாசுக் கற்பனையும் ஒழிந்தது! ஆனால், அவற்றிற்கு எல்லாம் மேலான ஒன்று என்று கூறிக்கொண்டு, ஏதோ ஒரு சொல்- 'கடவுள்' என்றொரு எண்ணம்!! அதைக் கற்பனை செய்து கொண்டனர்.

அக் கற்பனைக் கடவுளின் ஆதரவைப் பெற, அந்த எண்ணத்தைத் துதித்து வணங்கிக் காணிக்கைகள் செலுத்தும் முறைகளைக் கையாண் டனர். அதனாலும் மாந்தர் கண்ட பலன் ஏதும் இல்லாமல் போகவேதான், தன்னைச் சூழ்ந்துள்ள பொருள்களின் உண்மையான தன்மைகளையும், இயற்கை வளங்களையும் உற்றுணர்ந்து ஆராய ஆரம்பித்துப் பகுத்தறிந்து பயன் பெற முனைந்த முயற்சியின் வெற்றியைக் கண்டனர். இவ்வாறே இவ்வுலகம் அறிவாட்சியை அடைந்தது.

அதுபோலவேதான், நம் தமிழ் நூல்களிடையே அறிவாட்சியை அளிக்கும் திருக்குறள் நூலும் பிறந்து வளர்ந்தது! ஆனால், ஆரியச் சிறு கூட்டம், தமிழகத்தில் நுழைந்து, தமிழ்க்கலை-கலாச்சாரங்களில் ஊடுருவித் தமது சோம்பேறித் தனமான வயிற்றுப் பிழைப்பை மட்டுமே முக்கிய மாகக்கருதி, மாந்தரின் மதியை மாய்த்துவிடும் மூடத் திருப்பணியைச் சற்றும் தயக்கமின்றி, அவர்தம் தலைமுறை தலைமுறையாய்த் தொடர்ந்து செய்து வருகின்றனர்.

அத்தகைய கொடும் பாதகர்களாகிய பார்ப்பனர் ஆதிக்கம் ஓங்கிய காலத்தில் மட்டுமே தமிழ் அறிவியக்க நூல்கள் அழிந்துபடவும், மறைந்துபோகவும் நேர்ந்துள்ளன. அவற்றைக் கண்டு மனம் கொதித்து அழுத அழுகினிச் சித்தர்களும், புத்தர்களும், புலவர்களும் புலம்பிய பகுத் தறிவு மரணசாசனங்களிற் சிலவற்றைப் படித்துப் பாருங்கள்:

(1) "சாதிப் பிரிவிலே தீ மூட்டுவோம்......"
[பாம்பாட்டிச்சித்தர்]

(2) "நீதிகெட ஓதுமறை வேதியர்கள்......"
[திருக்கலம்பகம்]

(3) "நாலெனிலோ கோல் சாயும்......"
[ஔவை]

(4) "முட்டிபுகும் பார்ப்பார் அகத்தை எட்டிப் பாரோமே......"
[கம்பர்]

(5) "கொலையறமாம் எனும் கொடுந்தொழில் மாக்கள்......"
[சாத்தனுர்]

(6) "பார்ப்பன மாந்தர்காள் பகர்வது கேண்மின்
....
நால்வகைச் சாதி இந்நாட்டில் நீர் நாட்டினீர்......"
[கபிலர்]

(7) "கோயிலாவது ஏதடா குளங்களாவது ஏதடா
கோயிலும் குளங்களும் கும்பிடும் குலாமரே......"
[சிவவாக்கியர்]

(8) "சாத்திரத்தைச் சுட்டுச் சதுர்மறையைப் பொய்யாக்கி
சூத்திரத்தைக் கண்டு சுகம் பெருவ தெக்காலம்......"
[பத்திரகிரியார்]

(9) "சாத்திரம் பல பேசுஞ் சழக்கர்காள்!
கோத்திரமுங் குலமுங் கொண்டென் செய்வீர்?"
[இராமலிங்க சுவாமி]

(10) "பேர்கொண்ட பார்ப்பான் பிரான்தன்னை அர்ச்சித்தால்
போர்கொண்ட வேந்தர்க்குப் பொல்லா வியாதியாம்
பார்கொண்ட நாட்டுக்குப் பஞ்சமும் ஆம்."
[திருமூலர் திருமந்திரம்]

(11) "கொள்ளை வினைக்கூட்டுறவில் கூட்டிய பல்சமயக்
கூட்டமும் அக்கூட்டத்தே கூவுகின்ற கலையும்
கள்ளம் உறும் அக்கலைகள் நாட்டிய பல்கதியும்
காட்சிகளும் காட்சிதரும் கடவுளரும் எல்லாம்
பிள்ளை விளையாட்டென நன்கு அறிவித்திங்கெனையே..............."
[இராமலிங்கசுவாமி]

(12) "நட்ட கல்லைத் தெய்வமென்று நாலு புட்பம் சாத்தியே
சுற்றி வந்து மொணமொணன்னு சொல்லும் மந்திரம் ஏதடா
நட்ட கல்லும் பேசுமோ .... ?"

[சிவவாக்கியர்]

(13) "எத்தனைதான் கல்லுகளைப் பூசித்தாலும்
ஈனர்களே உங்களுக்கு மோட்சமுண்டோ ?
சுத்தமும் தலைமுழுகித் தவம் செய்தாலும்
சொல்லிய பேரின்பம் தோன்றுமோதான் ?
பித்தர்களே கல்லுகளை விலைக்கு வாங்கிப்
பிரானென்ற சிலையிலே முடிந்துகொண்டு
செத்தபின் கைலாசம் சேர்வதென்றால்,
சேர்வதில்லை; அருநரகம் சேர்வீர்காண் !"

[சிவவாக்கியர்]

(14) "செத்த பிறகு சிவலோகம் வைகுந்தம்
சேர்ந்திடலா மென்றே எண்ணி இருப்போர்
பித்த மனிதர் அவர்சொலும் சாத்திரம்
பேயுரையா மென் றூதேடா சங்கம்"

[பாரதியார்]

(15) "இருட்டறையில் உள்ளதடா உலகம் ! சாதி
இருக்கின்ற தென்பானும் இருக்கின்றானே ?
மருட்டுகின்ற மதத்தலைவர் வாழ்கின்றாரே ?
...."

[பாரதிதாசன்]

மேலே குறிக்கப்பட்டுள்ள பாடல்களிலிருந்து, தொன்று தொட்டு இன்றுவரையில் தமிழகம் தானிழந்த பகுத்தறிவாட்சியை மீட்பதற்காக அவ்வப்போது அரும்பாடு பட்டுக்கொண்டேதான் இருக்கின்றதென்பது எளிதில் விளங்குகின்றதல்லவா ?

விஞ்ஞான அறிவாட்சியை ஏற்படுத்திக் கொண்டுள்ள மேலை நாட்டினரும் திருக்குறளின் பகுத்தறிவு பண்பாட்டைப் பெரிதும் பாராட்டிப் பதினெட்டு மொழிகளுக்கு மேல் திருக்குறளை மொழிபெயர்ப்புச் செய்து ஐரோப்பா - அமெரிக்கா எங்கனும் வழங்கியுள்ளனர்.

ஆங்கிலப் புலவராகிய ஜி. யூ. போப்பு என்பவர் திருக்குறள் இயற்றிய திருவள்ளுவரை 'உலகம் போற்றும் ஒப்பற்ற பெருமகன்' என்று புகழ்ந்து எழுதி இருக்கிறார். அண்மையில் தமிழகம் வந்த சோவியத் ரஷியப் புலவர்களும் திருக்குறளின் பெருமையை ஆங்கில மொழிபெயர்ப்பு மூலம் அறிந்து, நம் தமிழ் திருக்குறளைத் தமது ரஷிய மொழிகளில் மொழிபெயர்ப்பதற்காக எடுத்துச் சென்றுள்ளனர்.

இத்துணை அருமை பெருமைக்கு உரிய திருக்குறள் நூலை இயற்றிய 'வள்ளுவன் தன்னை உலகினுக்கீந்து வான்புகழ் கொண்ட தமிழ் நாடு' என்று பாரதியார்கூடப் பாடியிருந்தும், ஏனையப் பார்ப்பனரும் - பார்ப்பனப் பண்டிதரும் - பார்ப்பனப் பத்திரிகைகளும், இந்த இருபதாவது நூற்றாண்டின் இறுதியாகிய அணுக்குண்டு சகாப்தத்திலுங்கூட திருக்குறள் அறிவுக்குத் தம் சமுதாயத்திலும், பத்திரிகைகளிலும் போதிய மதிப்பளிக்க மனமில்லாமல் இருட்டடிப்புச் செய்துவிட்டுக் கம்பராமாயணம், மகாபாரதம் போன்ற கேடுகெட்ட மூட பக்தியைப் பரப்ப உதவும் கட்டுக்கதைகளுக்கு மட்டுமே மிகமிக முக்கியத்துவம் வழங்கி வருகின்றனர் என்றால், திருக்குறள் அறிவின் மீட்புப் பணி 'திராவிடர் கழகத்திற்கு' எவ்வளவு இன்றியமையாததாக ஆகிவிட்டது என்பது ஒவ்வொரு உண்மைத் தமிழனும் உணர்ந்து தெளியத் தக்கதாகுமன்றோ?

அதனால்தான், பார்ப்பனர்களால் படுபாதாளத்தில் ஆழ்த்தி மறைக்கப்பட்ட திருக்குறளை - பார்ப்பன தாசர்களான தமிழ்ப் புலவர்களாலேயே புறக்கணிக்கப்பட்ட திருக்குறளை, மீண்டும் மக்கள் மன்றத்திற்கு மீட்கும் மகத்தான மீட்புப் பணியைத் திராவிடநாட்டின் தந்தை பெரியார் ஈ. வெ. ரா. அவர்கள், ஒரு மாபெரும் 'திருக்குறள் மாநாடு' நடத்தி, சாதிக்க அரிய அச்சாதனையைச் சாதித்தே விட்டார்கள் என்பதுதான் இங்கு மிகவும் முக்கியமாகக் குறிப்பிடத் தக்கதாகும்.

அத்தகைய பெருந்தகையான - ஈடு இணையற்ற - பெருமை வாய்ந்த பெரியாரின் 'திருக்குறள் மாநாட்டுக்கு' பிறகுதான், தமிழகத்தின் திக்கெங்கும் திருக்குறள் அறிவுப் போர் முரசு, ஆரியத்தை எதிர்த்து மீண்டும் ஆர்ப்பரித்து முழங்க முடிந்தது என்பதற்காகவேனும், அத்தகைய ஈரோட்டுப் பெரியாருக்கு எல்லாக் கட்சித் தமிழரும், தாழ்த்தப்பட்ட தமிழ்ப் புலவரும் தக்க நன்றியறிதல் உடையவர்களாய் எக்காலத்தும் விளங்கக் கடமைப் பட்டுள்ளார்கள்.

5. திருக்குறள் பொறுப்பு:

திருக்குறள் நூல் மகத்தான பொறுப்பு உணர்ச்சியைப் போதிக்கும் பொருளியல் நூலாகும்! கேவலம், வெறும் எண்ணத்தை மட்டும் போதிக்கக்கூடிய கடவுட் புராண குப்பைகளோடு திருக்குறளை ஒப்பிட்டுப் பார்க்க முயல்வதைவிட சாங்கியம், சார்வாகம், பிரகஸ்பதி, லோகாயதம், பஞ்சபூதாத்துவம், சூனியம் முதலான பண்டைக்காலப் பகுத்தறிவு நூல்களோடு ஒப்பிட்டுப் பார்த்து உண்மை உணர்வதே சாலச் சிறந்ததாகும்.

ஏனெனில் கடவுள்கள், பேய் பிசாசுகள், சைதான்கள், நரகங்கள், சுவர்க்கங்கள் போன்ற கருத்துக்களுக்கும், அழுகை, தொழுகை, ஆசாரம், பூசை புனஸ்காரம் போன்ற செயல்களுக்கும் திருக்குறள் நூலில் கிஞ்சிற்றும் இடமே கொடுக்கப்படவில்லை என்பதோடு, அவற்றை எல்லாம் அருவருத்தும், கண்டித்தும் கூறப்பட்டுள்ளன என்பதும் குறிப்பிடத்தக்கவையாம்!

"தேவர் அனையர் கயவர் அவரும்தாம்
மேவன செய்துஒழுக லான்" [திருக்குறள்]

"அச்சமே கீழ்களது ஆசாரம்; எச்சம்
அவாஉண்டேல் உண்டாம் சிறிது" [திருக்குறள்]

என்ற இரண்டே குறளடிகள் போதும், ஆரியக் கயவர்கள் கற்பித்த கடவுள்களையும், அக்கீழ் மக்கள் புரியும் ஆசாரம்-பூசை-புனஸ்காரங்கள் பற்றியவைகளையும் திருக்குறள்நூல் எவ்வளவு வன்மையாகக் கண்டித்து அருவருப்புக் கொண்டுள்ளது என்பதை விளக்க!!

காரணம், கடவுள்கள் அத்தனையையும் கயவர்களாகக் கருதும் படியே காட்டுமிராண்டி காலத்து வேதியர்கள் அனைவரும் கற்பனை செய்துள்ளனர். அவற்றை எல்லாம் நன்கு ஆராய்ந்து, அறிந்ததாலேயே நம் திருவள்ளுவர் அவ்வாறெல்லாம் பாடியுள்ளார் என்பது தெளிவு.

எனவே நாமும், அக்கயவர்களின் கதைகளில் சிலவற்றையேனும் குறிப்பாக இங்கு தெரிந்துகொள்வோமாயின், அக்குறளடிகள் இரண்டும் எவ்வளவு பொறுப்புவாய்ந்த அறிவுரை பகர்ந்துள்ளன என்பதை எளிதில் புரிந்துகொள்ளலாம்:

"பரமேஸ்வரன் எனும் கடவுள், தேவலோகத்திலுள்ள தேவ சபையில் நிர்வாணமாகக் காமவெறியனுகித் திரிந்த காலத்தில், தேவர்களால் தண்டிக்கப்பட்டு, பிறகு தேவாரண்யத்திற்குப் போய் அமிருதரஸ பானங்களினுல் அகங்காரமாகி அவ்வீஸ்வரனுடைய இந்திரியம் ஒழுகி ஆருய்ப் பெருகிற்ரும்! அந்த இந்திரிய நதியில்த்தான் முப்பத்து முக்கோடி தேவமாதர்கள் உற்பத்தியானுர்களாம்.

அம்மா துசிரோன்மணிகளைச் சிவன், சுரசமுகங்களுக்குக் கொடுத்துத் தானும் அனுபவித்துக் கொண்டிருந்தானும்.

அச்சமயம் பிரம்மாவுக்கு மாமிசத்தின்பேரில் இச்சை உண்டாக அதைப் புசித்தால் சகல தேவர்களும், உத்தம மானிடர்களும் தூற்று வார்களே என்று அஞ்சி, அதற்கு ஒரு உபாயமாக நரையாகம், மதுயா கம், அஸ்வயாகம், கோயாகம், பௌண்டிரியயாகம் ஆகியவற்றை உண் டாக்கி அவற்றிற்குப் பெருமைகள் பல ஈந்து சகலரையும் வஞ்சித்து, தான் சொன்ன வாக்கியமே வேதவாக்கியம் என்று போதித்து, தன்னைச் சுயம்பு வென்று பிரசித்தமாகச் செய்து கொண்டானும்!

அவற்றிற்காக அநேக சூத்திரங்களை இயற்றி யாகம் செய்ய ஆரம் பித்துச் சகல தேவர்களையும் தங்கள் தங்கள் மாதர்களுடன் வரும்படி கட்டளையிட்டு அனைவரும் வந்து கூடி யாக மண்டபத்தில் இருக்கும் போது, பரமேஸ்வரன் பார்வதியுடனே உத்ஸாகத்தோடு ககன மார்க்க மாக நர்த்தனஞ் செய்துகொண்டு வருகையில், பார்வதியுடைய கன்னத் லும், கண்டத்திலும் மற்ற அவயவங்களிலும் இருந்த ஈஸ்வரனுடைய காமாந்தகார அடையாளங்களைக் கண்டு, தேவர்கள் நகைக்க அதைப் பார்த்து இலஜ்ஜையுற்ற பிரம்மா;

"வித்யாவித்தவிஹீ நஞ்ச சூத்ரகர்ணோபஜீவிந:
தேஸந்தி தூஷகா ஸ்ரார்த்தேநாம் அங்கஹீநம் குணாநித:"

என்ற ஸ்லோகம் ஒன்றைச் சொன்னனாம்.

அச்சுலோகத்தைக் கேட்டவுடனே பார்வதி கோபமுடையவளாய் பிதாவாகிய பிரம்மா அவ்வாறு கூறலாமா என்று, தன் நாக்கைப் பிடுங்கிப் பிரம்மாவின் பேரில் எறிந்துவிட்டு, அங்கிருந்த யாக குண்டத்தில் விழுந்து உருகிப் பஸ்பமாய்விட்டாளாம்.

அதைக்கண்டு அந்த ஈஸ்வரன் துக்கமும் கோபமும் உடையவனாய் ஓம குண்டத்திலே இருந்த அக்கினியை எல்லாம் வாரி இறைத்துத் தன் சரீரத்திலும் அப்பிக்கொண்டு, அப்பஸ்பத்தையும், பார்வதியினுடைய எலும்புகளையும் தன் சிரசிலும், கரங்களிலும், சரீர முழுவதிலும் தரித்துக் கொண்டு பரிகாச வேஷரூபனாகி ஹோஸதி-மஹாஸதி முதலிய ஆக்ரோ ஸதம் செய்தனனாம்! அப்பால், அழுதும், புரண்டும் நாலா திக்குகளிலும் பார்த்துப் பார்த்து அவ்வீஸ்வரன் காமாக்கினியில் மூழ்கித் தன்னுரு தனக்குத் தெரியாமல் சர்வ சுகத்தையும் துறந்து ஒருவரையும் பாராமல் திசை தெரியாமல் கண்கெட்டு வாய்விட்டுப் பிதற்றும் பைத்தியக்காரனாகி தேவாரண்யம் புகுந்து ஒரு புதருக்குள்ளே ஒளிந்தானாம்!!

அதை மன்மதன் கண்டு பரிகசிக்கவே அங்கிருந்து தபசிகள் வசிக்கும் இடத்திற்குப் போய்ச் சேர்ந்தனனாம்! அவனைக் கண்ட தபசி களில் சிலர், பேயோ பிசாசோ, மூர்க்கனோ, துராசாரனோ, காமியோ என்றும், வேறுசிலர், உக்கிரதபசியோ, ஈஸ்வரன்தானோ, சுவர்க்காபவர்க் கனோ என்றும் பேசிக்கொண்டார்களாம்!!"

இவை தவிர, 'லிங்க புராணத்தில்' இந்த ஈஸ்வரனைப்பற்றி மற்றொரு ஆபாசமான கதையும் உண்டு. அஃதாவது: "ஈஸ்வரன் தாருகாவனத்திலுள்ள ஒரு ரிஷியின் பத்தினியைக் கண்டு மோகித்துப் பலவிதமான மாறுவேடங்களால் அவளை மயக்கி அவளுடன் கூடி சுகமனுபவித்து வந்தானும்! அதனால், அவள் தன் நாயகனாகிய ரிஷியினிடத்தில் எப்போதும் போல் விருப்பம் உடையவளாய் இல்லாமல் இருப்பதைக் கண்ட அந்த ரிஷியானவன், அவள் மீது சந்தேகம் கொண்டானும்!

ஒருநாள் அந்த ரிஷி, அவளிடம்; தான் வெளியே போவதாகவும், மாலைப் பொழுதிற்குத் திரும்பி வருவதாகவும் கூறிவிட்டுச் சென்றானும். உடனே, ஈஸ்வரன் அங்கு வந்து அவளோடு கூடி இன்புற்றுக் கொண்டிருந்தானும்!! அதே சமயத்தில் அவர்களைக் கையுங்களவுமாகக் கண்டு பிடிக்க எண்ணிய அந்த ரிஷியும் திரும்பி வந்து, தன் மனைவியின் சோரச் செயலைக் கண்டு சினந்து, அச்சோர நாயகனான ஈஸ்வரனைப் பார்த்து, 'உன்னுடைய ஆண்குறி அறுந்து விழக்கடவது' என்று சபித்தனனும்!!!

அச்சாபத்தால், ஈஸ்வரனுடைய ஆண்குறியாகிய லிங்கம் அறுந்து கீழே விழுந்து விட்டதாம்! அப்போது, ஈஸ்வரனும் மகாக் கோபம் உடையவனாகி; 'அறுந்து விழுந்த என் லிங்கம் உன் நெற்றியில் ஒட்டிக் கொள்ளக் கடவது' என்று அந்த ரிஷிக்கு எதிர் சாபம் கொடுக்கவே, கீழே விழுந்த ஈஸ்வரனுடைய ஆண்குறி துள்ளிக் கிளம்பி அந்த ரிஷியின் நெற்றியில் ஒட்டிக் கொண்டதாம்!!

அந்த அதிசயத்தைக் கண்ட ரிஷி, அங்கு வந்து தன் மனைவியோடு கூடி இன்புற்றிருந்தது ஈஸ்வரனே என்று ஞானக் கண்ணால் அறிந்து, அவன் பாதத்தில் விழுந்து, 'ஏ, சுவாமி! நான் செய்தது தப்பிதமே! என் பிழையைப் பொறுத்தருள வேண்டும்!! என் பேரில் தயவு செய்து, என் நெற்றியில் ஒட்டிக்கொண்ட உன் லிங்கத்தை விலகும்படி அருள் புரிய வேண்டும்' என்று வேண்டினனும்.

அதற்கு, ஈஸ்வரன் புன்னகை புரிந்து, 'இக்கோலத்துடன் கைலாச கிரிக்கு வருவாயாக' என்று கட்டளையிட்டுச் சென்றானும்!

அப்பால், அந்த ரிஷி தன் நெற்றியில் ஒட்டிக்கொண்டு தொங்கிய ஆண்குறியைத் தன் கரங்களால் தூக்கிப் பிடிக்கவே, அது மேலும் மேலும் நீளமாக வளர்ந்து கீழே தொங்கிற்றும்! அம்மகிமையைக் கண்ட மற்றொரு ரிஷி ஓடிவந்து, அதிகமாக வளர்ந்த அவ்வாண்குறியைத் தூக்கிப் பிடிக்க, அதற்கும் மேலும் அது வளர்ந்து வளர்ந்து தொங்கிற்றும்!! அதைக்கண்ட தாருகாவனத்து ரிஷிகள் எல்லோருமே வந்து அதைத் தாங்கிப் பிடுக்கப் பிடிக்க, அவ்வளவுக்கும் அதிக நீளமாக வளர்ந்து வளர்ந்து கடைசியில் கொஞ்சம் வளைந்து தொங்கிற்றும்!!

அதற்குமேலும் அந்த ஈஸ்வரனின் ஆண்குறியைத் தாங்கிப் பிடிக்க ரிஷிகளில்லாததால், அது தொங்கத் தொங்க அந்த ரிஷிக்கும்பல் அதை இழுத்துக்கொண்டே கைலாசகிரிக்குப் போய்ச் சேர்ந்ததாம்! அவ்வதிசயத்தைக் கண்டு, அப்போது ஈஸ்வரன் பக்கத்தில் இருந்த பார்வதி விழுந்து விழுந்து சிரித்தாளாம்!! ஈஸ்வரனும் மகிழ்ந்து, 'ரிஷிகளே! என் ஆண்குறியைக் கீழே விடுங்கள்' என்று கட்டளையிட, அவ்வாறே அவர்கள் விட்டனராம்!!!

அப்பால் ஈஸ்வரன், தன் ஆண்குறியை எடுத்துப் பார்வதியின் பெண்குறிக்குள் வைத்துக் காட்டி, 'இந்த அடையாளத்தைப் பூசைக்கு யோக்கியமாக பூலோகத்தில் வைத்துக் கும்பிடுவீர்களானால், உங்களுக்குச் சகல பாக்கியங்களும் சித்திக்கும்' என்று அருள்புரிய, அதுமுதல் அந்த ரிஷிகளும், மற்றவர்களும் அவ்வாறே பரம்பரை பரம்பரையாய்ப் பூஜை புரியும் அவ்வடையாளத்திற்குப் பெயர்தானும் 'லிங்க பூஜை'.

இனிப் 'பிரம்மாண்ட புராணத்தில்' பத்மை நிமித்தம் கூறப்பட்ட கதைகளைக் கவனிப்போம்; "பார்வதியினுடைய விவாகத்தில் பிரம்மா புரோகிதனாக இருந்து விவாக ஓமம் செய்தானும்! அப்போது, ஓம குண்டத்தைப் பிரதக்ஷணம் வருகையில், பார்வதியினுடைய நவரத்ன திவ்விய ஆபரணலங்காரங்களையும், மெல்லிய பட்டினால் நெய்யப்பட்ட ஆடைகளையும், அவள் சரீரத்தில் பூசப்பட்ட சந்தன, கற்பூர, மந்தார, பாரிஜாத குசுமம் முதலியவைகளின் பரிமளத்தையும், அவள் தன்னுடைய இடது கையினால் கீழ் முந்தாணியைத் தூக்கிப் பிடித்துக்கொண்டு, அன்னம் போன்று நடந்து வருகையில், அசையும் அவள் துடைகளையும் கண்டு காமலாகிரி மீறியதால், அப்பிரம்மாவுக்கு இந்திரியம் ஸ்கலிதமாயிற்றாம்!

உடனே, அவன் அந்த இந்திரியத்தை ஓம குண்டத்தைச் சுற்றி இருக்கும் ஒருகலசத்தில் விட்டானும்! அதில்'**அகஸ்தியன்**'பிறந்தானும்!!

மறுபடியும் அந்த பிரம்மாவுக்கு அவளுடைய தொடை அழகைக் காணக்காண இந்திரியம் ஸ்கலிதமாயிற்றாம்! அதை விருட்சபச்சை முதலிய அநேக செடிகளின் மேல் விட, 'வால-கில்லியாதி' முதலிய அநேக ரிஷிகள் உற்பவித்தார்களாம்!!

அவைகளைக் கண்ட பிரம்மா வெட்கம் அடைந்து செல்கையில், அங்கே ஒரு புற்றைக் கண்டு அதில் கொஞ்சம் இந்திரியத்தை விட்டானும்! அதில்த்தான் '**வால்மீகி**' ரிஷி பிறந்தானும்!!

அப்பால், அவ்விடமிருந்து போய் ஒரு சுடலைச் சாம்பலில் சிறிது, இந்திரியத்தை விட்டானும், அதில் 'பூரிச்சிரவன்' என்ற இராட்சதன் பிறந்தானும்! பின்னர், அவிடத்திலுள்ள எலும்புகளைப் பொறுக்கி ஒன்றாகச் சேர்த்து அதிலே சற்று இந்திரியத்தை விட, 'சல்லியன்' என்ற பராக்கிரம சாலி பிறந்தானும்!!

பிறகு, பிரம்மா அவிடத்தைவிட்டுப் போய்க் கொண்டிருக்கையி லேயே அவன் இந்திரியம் ஸ்கலிதமாகிக் கீழே விழ, அதை ஒரு பரவை புசித்து அதன் வயிற்றில் 'சகுனி' பிறந்தானும்! அப்பால், ஒரு குளத்தில் கொஞ்சம் விட்டானும்!! அதை ஒரு தவளை புசித்ததால், அதன் வயிற்றில் 'மண்டோதரி' என்ற பெண் பிறந்தாளாம்!!!

மிச்சமுள்ள இந்திரியத்தை அக்குளத்தில் உள்ள தாமரைப் பூவிலே விட்டானும்! அதிலே 'பத்மை' எனும் ஒரு புத்ரி பிறந்தாளாம்!! அப்புத் திரியின் அழகைக் கண்டு மயங்கி அவள்மீது காமம் கொண்ட அப் பிரம்மா, அவளுடைய கையைப் பிடித்துத் தன்னைக் கூடும்படி கேட்டானும்!!!

அப்பெண் திடுக்கிட்டு, 'ஐயோ! நீர் என் தந்தை ஆயிற்றே, இது தகுமா?' என்று மறுத்தாளாம்! அதற்கு பிரம்மா: 'புத்திரார்த்த நிமித்தம், தாயோடேனும், தமக்கையோடேனும், மகளோடேனும் மற்றும் யாரோ டேனும் கூடிப் புணரலாம்! என்று கூறும் வேதவாக்கியமாகிய :-

" மாதரமுபைத்ய, கஸாரமுபைதி, புத்ரார்தித
சகாமார்த்திநா புத்திரலோகோ நாஸ்திகத்
ஸர்வம்பரவோ, விந்துஹஸ், தஸ்மாத் புத்ரார்த்தம்
மாதரம், ஸ்ரெஞ்சாதி, ரோஹதி: "

என்ற ஸ்லோகத்தை உணராயோ' என்றும்!

அதன்பிறகு, பத்மை இணங்கவே, பிரம்மா அவள் மோகத்தில் மூழ்கிக் காமசுகம் அனுபவித்துக் களித்திருக்கும் அக்கிரமங்களைச் சகல தேவர்களும் அறிந்து, பிரம்மாவைத் துஷ்டன் என்றும், அம்போஜகர்மன், நித்சஷ்டன் என்றும் தூஷித்து, கந்தர்வரை அழைத்து, பிரம்மாவின் அக் கிரம போகத்தை அழித்துவிட்டு வரவேண்டும் என்று அனுப்பினராம்!

அவ்வாறே கந்தர்வர் சென்று, பிரம்மா உறங்கும் சமயத்தில், பலவித சங்கீத வாத்தியங்களுடன் பாடி அவனை எழுப்பி, அப்பால் அவனுக்கு மானம் உண்டாகும்படியான கீதங்கள் பல பாடினராம்! அப்பாடல் களைக் கேட்டு வெட்கப்பட்ட பிரம்மா, பத்மையைக் கர்ப்பத்தோடு விட்டுச் சென்றால், அபவாதம் ஏற்படும் என்று அஞ்சித் தனது ஆண்குறி யினுலேயேப் பத்மையின் கர்ப்பத்தில் உள்ள இந்திரியத்தை உறிஞ்சி எடுத்தனனும்!!

அப்படி உறிஞ்சுகையில் அது அவனுடைய அண்டத்தில் வந்து நிரம்பிப் பெருகியதாம்! அதுவேதான், உலகத்தில் அண்டவாதம் என்று கூறப்படுவதாம்?

அப்பாலும், பிரம்மாவுக்கு காமவிகாரம் அதிகமாகி தேவலோகத்தில் உள்ள இரம்பை, மேனகை, திலோத்தமை, ஊர்வசி முதலிய தேவதாசிகளை அடைய நினைந்து தபசு செய்ய ஆரம்பித்தானும்!

அதைக் கண்ட இந்திரன், பிரம்மாவின் தபம் முற்றுப் பெற்றதாயின், காமவிகாரத்தால், கெடுதல் நேரிடும் என்று எண்ணி திலோத்தமையை அனுப்பி வைத்தானும்! அவள், தன்னுடைய ஆடல் பாடல்களால் பிரம்மாவினுடைய மூன்றரைக் கோடி தபசையும் கெடுத்ததுமன்றி, நான்கு பக்கங்களிலும் ஆடி நான்கு தலைகளை உண்டாக்கிவிட்டு, ஆகாயத்தில் பறக்கும்போது அவன் உச்சியில் ஐந்தாவது தலையையும் உண்டாக்கிக் கொண்டு, அவளைப் பின்தொடரும்படி செய்தாளாம்!!

அவ்வாறு பிரம்மா தன் தபம் கெட்டுக் காமாக்கினியால் சுற்றி வருகையில், ஈஸ்வரன் பிரம்மாவின் ஐந்து தலைகளில் ஒன்றை அறுத்தெறிந்தானும்! அதனால் பிரம்மாவுக்கு மீண்டும் வெட்கம் உண்டாகிக் காடுகளில் அலைந்து திரிகையில் அங்கொரு புதரிலிருந்த பெண் கரடியைப் புணர்ந்து அதன் வயிற்றில் 'ஜாம்புவந்தர்' என்ற கரடி முகமோடுள்ள புத்திரனைப் பெறச் செய்தானும்!!

பிறகு, அங்கிருந்து புறப்பட்டுப் போய் ஊர்வசி என்ற தேவதாசியிடம் சில உடன்படிக்கைகள் செய்து கொண்டு, முன்பு பத்மையின் கர்பத்திலிருந்து உறிஞ்சி எடுத்து அண்டத்தில் கொண்டிருக்கும் இந்திரியத்தை, ஊர்வசியின் கர்ப்பத்தில் விட்டானும்! அதில் **'வசிஷ்டன்'** என்ற ரிஷி பிறந்தானும்!! அப்புத்திரனிடம் தன் பதவியை ஒப்படைத்துவிட்டுப் பிரம்மா தபோவனம் சென்று விட்டானும்!!!"

இனி, பிரம்மாவுக்கு அடுத்த கடவுளாகிய மகாவிஷ்ணுவின் யோக்கியதையைச் சற்றே நோக்குவோமாயின், அவன் கிருஷ்ணவதாரத்தில் துவாரகாபுரியில் பதினாயிரம் கோபிகா ஸ்திரீகளுடன் கூடியும், குலாவியும் செய்த ஆபாசமான லீலாவினோதங்களும், ராஜமதி - சந்திரமதி என்னும் இரு பெண்களோடும் கூடி அனுபவித்த காமக்குரோத மோகலாகிரிகளும் காறியுமிழும் வண்ணம் இருக்கக் காணலாம்!

அந்த மகாவிஷ்ணுவின் மற்ற ஒன்பது அவதாரங்களிலுங்கூட ஒன்றுக்கொன்று படு மோசமான-அயோக்யத்தனமான அக்கிரமங்களே புரிந்திருப்பதையும், சற்றேனும் பகுத்தறிவுக் கண்ணோட்டம் உடைய எவரும் எளிதில் அறிந்து கொள்ளலாம்! அவற்றை எல்லாம் இங்கு விரிக்கில் பெருகும்!!

எனவே, மூலக் கடவுளாகிய மூவரின் கயமையை ஓரளவு உணர்ந்து கொண்டது போலவே இனி, ஏனையத் தேவர்கள் பலரின் கயமையையும் ஆரியக் கீழ் மாக்கள் எழுதிய வேதபுராணங்களில் உள்ளபடியே உணர்வோமாக!

தேவர்களின் தலைவன் **'தேவேந்திரனின்'** யோக்கியதை எப்படி எனில்; அவன், கௌதமன் என்ற முனிவனுடைய மனைவியாகிய அகலிகை என்பவளை ஏமாற்றி, அவளோடு கள்ளக் காதல் புரிந்து, அவள் கணவனால், தன் சரீரம் முழுவதும் ஆயிரம் பெண்குறிகள் உண்டாகும் படியான சாபம் பெற்ற கயவனுவானும்!

'சூரியபகவானுடைய' யோக்கியதை எப்படி எனில்; அவன், பாண்டுவினுடைய மனைவியாகிய குந்தியின் மீது காமுற்று, அவளோடு திருட்டுத்தனமாகக் கூடிய கயவனுவானும்!

'சந்திரதேவனுடைய' யோக்கியதை எப்படி எனில்; அவன், விஸ்வாமித்திரனுடைய மனைவியைக் கண்டு காமுற்று, அவளை அழைத்துக் கொண்டு போய்க் கூட முயன்ற கயவனுவானும்!

'எமதர்ம தேவனுடைய' யோக்கியதை எப்படி எனில்; அவன், மாண்டவ்யன் என்ற முனிவனை வஞ்சித்து, அவன் மகளைத் திருட்டுத் தனமாகக் கூடி காமபோகம் அனுபவித்து வந்த கயவனுவானும்!

'அக்னிபகவான்' 'வாயு பகவான்' களின் யோக்கியதைகள் எப்படி எனில்; எமதர்ம தேவனுடைய கள்ளக் காதலிமீது அக்னி பகவான் காமுற்றபோது, வாயு பகவான் மந்தமாருதம் வீசி, அப்பெண்ணுக்கும் காமம் உண்டாகும்படி செய்து, அவளை அக்னி பகவானுக்குக் கூட்டிக் கொடுத்த கயவனுவானும்!

இவ்வாறே கயவரினும் கேடு கெட்டவர்களாய்க் கற்பனை செய்யப் பட்டுள்ள தேவர்களையும், மூவர்களையும் பற்றிய வேத புராண சாஸ்திரங்களை எல்லாம் வெகு விளக்கமாகக் கற்றுத் தேரிய காரணத்தாலேயே, நம் திருவள்ளுவர் தனது திருக்குறளிலே மிகவும் பொறுப்புணர்ச்சியோடு, அப்புராண சாஸ்திர வேத மெனும் குப்பை கூளங்களை எல்லாம் புறக்கணித்துவிட்டதோடு, மிக மிகக் கடுமையாகக் கண்டித்தும் கூறியுள்ளார் என்பதை ஒவ்வொரு தமிழரும் மிக்க நுணுக்கமாக ஆராய்ந்து அறிந்து கொள்வதும் அவரவரின் பொறுப்பே ஆகும்.

அத்தகைய பொறுப்பும், புத்தியும் உள்ள தமிழர் ஒவ்வொருவரும் உணர்ந்து கொள்வதற்காகவே வள்ளுவர் மேலும் மேலும் வலியுறுத்திக் கூறியுள்ளார்:-

" அவிசொரிந் தாயிரம் வேட்டலின் ஒன்றன்
உயிர்செகுத் துண்ணாமை நன்று."

6. திருக்குறள் வெறுப்பு :

திருக்குறள் நூல் திட்டவட்டமாகத் தெய்வ நம்பிக்கையை வெறுத்தே வந்துள்ளது! அதனாலேயே அந்நூலை, ஏனைய அறிவியக்க-விஞ்ஞான நூல்களோடு ஒப்பிட்டுப் பார்க்க வேண்டுமே ஒழிய, பொய்யைப் போதிக்கும் வேத புராணங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கக் கூடாது என்றும், திருவள்ளுவரை ஒரு ஆரிய ரிஷிபோல் சடாமுடி உடையவராக உருவகப்படுத்தக் கூடாதென்றும் கருதுகிறோம்.

ஆரியக் கயவர்களின் வேஷமாகிய உச்சிக்குடுமி, சடாமுடி, சர்வ மொட்டை ஆகியவற்றை திருவள்ளுவரே கண்டித்துத் திருக்குறளில் தீட்டியுள்ளார் ;

" மழித்தலும் நீட்டலும் வேண்டா உலகம்
பழித்தது ஒழித்து விடின்."

மேலும், ஆரியக் கயவர்களின் கற்பனைகளாகிய தெய்வங்களை நம்பிக் கொண்டோ, தொழுதுகொண்டோ சோம்பிக் கிடத்தலாகாது என்பதற்கு ஆதாரமாக அநேக குறளடிகளை எழுதியுள்ளார். அவற்றில் சிலவற்றையேனும் படித்துப் பார்ப்போம் ;

" தெய்வந் தொழாஅள் கொழுநன் தொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் மழை "

உரை :- (ஆரியக் கயவர் கற்பித்த) தெய்வத்தைக் கருதாமல், கணவனைக் கருதி வாழ்பவளே, பெய்யெனப் பெய்யும் மழைக்கு ஒப்பர்வாள்.

" தெய்வத்தான் ஆகாது எனினும் முயற்சிதன்
மெய்வருத்தக் கூலி தரும் "

உரை :- மூட நம்பிக்கையால், ஒன்று முடியாமற் போகலாமாயினும், முயற்சி மீதுள்ள நம்பிக்கையால், முயன்ற அளவுக்குப் பலன் கிட்டியே தீரும்.

" ஊழையும் உப்பக்கம் காண்பர் உலைவுஇன்றித்
தாழாது உஞற்று பவர் "

உரை :- (மூட நம்பிக்கையால் கூறப்படும் 'தலைவிதி' எனும்) இயற்கைச் சூழ்நிலையையும் மாற்றி அமைத்துக் கொள்ளும் வலிமை, விடா முயற்சி செய்பவர்க்கு வரும்.

" குடிசெய்வல் என்னும் ஒருவற்குத் தெய்வம்
மடிதற்றுத் தான்முந் துறும்."

உரை :- தன்குடியை உயரச் செய்ய முயற்சிப்பவனுக்குக் குறுக்கே நிற்க (ஆரியக் கயவர் கற்பித்த) தெய்வத்தாலும் முடியாது.

" வேண்டிய வேண்டியாங் கெய்தலால் செய்தவம்
ஈண்டு முயலப் படும்."

உரை :- இல்லற வாழ்க்கையிலேயே விரும்பிய வாறெல்லாம் அடைய முடியும். ஆதலால், செய்தவம் எனும் முயற்சியை இங்குதான் செய்யவேண்டும். (மற்றவர்க்குப் பாரமாய் விளங்கும் ஆரியத் துறவறத்தை ஏற்றுச் சோம்பித் திரியலாகாது.)

" உற்றநோய் நோன்றல் உயிர்க்குறுகண் செய்யாமை
அற்றே தவத்திற்கு உரு "

உரை :- தனக்கு உற்ற துன்பத்தைப் பொறுத்தலும், மற்ற உயிர்க்கு (ஆரியக் கயவர் செய் யாகம் போல்) துன்பம் செய்யாதிருத்தலும் ஆகிய அவ்வளவுதான் தவத்திற்கு அடையாளம்.

" பேதைமை என்பதொன்று யாதெனின் ஏதம்கொண்டு
ஊதியம் போக விடல் "

உரை :- மூடத்தனம் என்பது எது என்றால், ஒருவன் தனக்குக் கெடுதலானவற்றை (ஆரிய வேத மத சாஸ்திரங்களை)க் கைக்கொண்டு, நன்மையான வற்றை (பயன் விளைவிக்கும் பகுத்தறிவை)க் கைவிடுதலாகும்.

" ஓதி உணர்ந்தும் பிறர்க்கு உரைத்தும் தான்அடங்காப்
பேதையின் பேதையார் இல்."

உரை :- பகுத்தறிவு நூல்களைப் பயின்றும், அவற்றின் பொருளை உணர்ந்தும், பிறர்க்கு உணர்த்தியும் வரும் ஒருவன், தான்மட்டும் அவற்றின்படி நடக்காவிட்டால், அவனைப் போன்ற மூடன் வேறெவனுமே இல்லை.

" ஏதிலார் ஆரத் தமர்பசிப்பர் பேதை
பெருஞ்செல்வம் உற்றக் கடை"

உரை :- (அத்தகைய) மூடனிடம் பெருஞ் செல்வம் கிடைத்த போது, அவனோடு தொடர்பில்லாத அயலார் (எனும் ஆரியப் பார்ப்பனப் புரோகிதப் பஞ்சாங்கப் படைகள், திதி - திவசம் - கருமாதி - கலியாணம் - கோவில் - குளம் - கும்பாபிஷேகம்- தேர் - திருவிழா - வேதம் - மந்திரம் எனப் பல தந்திர உபாயங்களால்) நிறைய நன்மை பெற, அவனுடைய சுற்றத்தாராகிய அப்பிராணிகள் பசியால் வருந்துவர்.

" புகழ் இன்றால், புத்தேள்நாட்டு உய்யாதால் என்மற்று
இகழ்வார்பின் சென்று நிலை "

உரை :- (அவ்வாறெல்லாம் ஒரு மூடனிடம் பயன் பெறும் அயலராகிய ஆரியர்கள், அம் மூடனைச் சூத்திரன் என்றே இகழ்கின்றனர்! எனவே,) மதியாமல் இகழ்கின்றவரின் பின் சென்று பணிந்து நிற்கும் நிலை, அம்மூடனுக்குப் புகழும் ஆகாது; (அந்த ஆரியக் கயவர்களின் கற்பனையான) சுவர்க்கத்திலும் செலுத்தாது. (ஏனென்றால், சூத்திரப் பிறவிக்குச் சுவர்க்கமில்லை என்பது சாத்திரம்) என்றால், வேறு பயன் என்ன?

" ஒட்டார்பின் சென்று ஒருவன் வாழ்தலின் அந்நிலையே
கெட்டான் எனப்படுதல் நன்று "

உரை :- (வேறொரு பலனும் இல்லாவிட்டாலும், செல்வச் சீமானாக உயிர்வாழ்தல் என்பதற்காக மட்டுந்தான் என்றால், அம்மூடன் தன்னை) மதியாத (பார்ப்பன — இந்து) மதத்தைத் தழுவி உயிர் வாழ்வதைவிட, அதை எதிர்த்து நின்று (இராவணன் போல்) அழிந்தான் என்று சொல்லப்படுதலே நன்று.

" மருந்தோமற்று ஊன்ஓம்பும் வாழ்க்கை பெருந்தகைமை
பீடழிய வந்த இடத்து "

உரை :- ஒருவனுடைய தன்மானத்தின் சிறப்பு கெட நேர்ந்தபோது, அவன் (விபீஷணன் போல்) உடம்பை மட்டும் காத்து வாழும் வாழ்க்கை, சாவாமைக்கு மருந்தோ?

" அறைபறை அன்னர் கயவர்தாம் கேட்ட
மறைபிறர்க்கு உய்த்துரைக்க லான் "

உரை :- (ஆரியக் கயவர் தலைமுறை தலைமுறையாய்த்) தாம் கேட்டறிந்த வேதப் பொருளைப் பிறர்க்கு வலியக் கொண்டுபோய்ச் சொல்லி (வயிறு வளர்த்துத்) திரிவதால், அடிக்கப்படும் கொட்டுக்குச் சமமாவர் (ஆரியக்) கயவர்.

" நன்றுஅறி வாரிற் கயவர் திருவுடையர்
நெஞ்சத்து அவலம் இலர் "

உரை :- நன்மையானவற்றை (பகுத்தறிவை) அறிந்தவரைவிட, (கெடுதலான ஆரிய வேதமத சாஸ்திரங்களை அறிந்த) கயவரே நல்ல செல்வம் உடையவர்! ஏனென்றால், அக்கயவர் தம் நெஞ்சில் (பொது நலம் பற்றிய) கவலை இல்லாதவர். (அதனால், யார் எக்கேடு கெட்டுப் போனாலும் போகட்டும்! எந்த ஆட்சி வந்தாலும் வரட்டும்!! சென்ற வரைத் தூற்றியும் - வந்தவரை வாழ்த்தியும் தம் சுயநலத்தைப் பூர்த்தி செய்து கொள்வர்!!!)

"அகப்பட்டி ஆவாரைக் காணின் அவரின்
மிகப்பட்டுச் செம்மாக்கும் கீழ்"

உரை :- (அத்தகைய ஆரியக்) கீழ் குணம் படைத்த மாக்கள் (தம் ஆரியமாய்கையில் சிக்கித்) தமக்குக் கீழ்ப்பட்டவராய் நடப்பவரைக் கண்டால், அப்பாமரரைவிடத் தாம் (நான்கு படிகள்) மேம்பாடுடையவராய் (பிராஹ்மணராய்) இறுமாப்படைவர்.

"ஈர்ங்கை விதிரார் கயவர் கொடிறுடைக்கும்
கூன்கையர் அல்லா தவர்க்கு"

உரை :- (அப்படிப் பிராஹ்மணரான அக்) கயவர் தம் கன்னத்தை இடித்து உடைக்கும்படியான முஷ்டீகரம் உடையவர்கட்கே பணிவர். (ஆதலின், அவர்களை வைசியர்களாகவும், சத்திரியர்களாகவும் இரண்டாம், மூன்றும் படிகளுக்கு உயர்த்தினர்) அல்லாதவர்களுக்குத் தாம் உண்ட எச்சில் கையையும் உதற மாட்டார். (ஆதலால், அவர்களிடம் அகப்பட்டுக்கொண்ட அந்நான்காம் சாதியினர் சூத்திரர்களாகவும், பஞ்சமர்களாகவும் தாழ்த்தப்பட்டனர்.)

"உடுப்பதூஉம் உண்பதூஉம் காணின் பிறர்மேல்
வடுக்காண வற்றாகும் கீழ்."

உரை :- (மேலும், அவ்வாறு தாழ்த்தப்பட்ட பெருங்குடி மக்கள் தாமாகவே பாடுபட்டுத் தேடி) நல்ல ஆடைகள் உடுத்திக் கொண்டாலும், நல்ல உணவை உண்டாலும் அவற்றைக் கண்டு (பார்ப்பனக்) கயவர்கள் சகிக்க மாட்டாமல், வேண்டும் என்றே அவற்றைப்பற்றி குற்றம் கூறத் தம் சாஸ்திரங்களைப் புரட்டுவர்.

"சொல்லப் பயன்படுவர் சான்றோர்; கரும்புபோல்
கொல்லப் பயன்படும் கீழ்."

உரை :- (ஆகவே, அத்தகைய கொடிய மனப்பான்மை கொண்டு கீழ்மைக் குணம் படைத்த ஆரியக் கயவர்களை) அணுகிக் குறை சொல்லிய அளவிலேயே திருந்திச் சான்றோர் ஆகிவிடுவார்கள் என்று எண்ணாமல், அவர்களை கரும்பாலையில் இட்ட கரும்பு போல் நசுக்கி அழித்தால்த்தான் மக்கள் சமுதாயத்திற்குப் பயன் உண்டாகும்.

இவ்வாறே ஆரியக் கயவர்களையும், அவர்தம் தேவர் - மூவர் - தெய்வம் முதலானவற்றையும் இழித்தும், பழித்தும், வெறுத்துமே திருவள்ளுவர் பாடியுள்ளார்.

மக்களைக் கோவில்களும், புராணங்களுமே அறியாமையிலும், அடிமைத்தனத்திலும் ஆழ்த்துகின்றன என்று, இற்றைக்கு இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்னரே துணிந்து கூறியவர், வடநாட்டில் கௌதம புத்தரும், தமிழ் நாட்டில் திருவள்ளுவருமே என வரலாறுகளிலும், இலக்கியங்களிலும் காண்கின்றோம்.

புரோகிதப் பார்ப்பனர்கள், அரசியல் பார்ப்பனர்கள் ஆகியோரின் தந்திரத்தினாலும், சூழ்ச்சியினாலுமே புத்தரின் உபதேசங்களும், வள்ளுவரின் வாயுரையும் இன்றுவரையிலுங்கூடக் குறிப்பிடத் தக்க நல்ல பலனைத் தரவில்லை எனலாம்.

கௌதம புத்தரின் கொள்கையைப் பரப்ப மன்னாதி மன்னர்கள் எல்லாம் முயன்றும், இறுதியில் இந்திய மக்கள், பார்ப்பனப் புரோகிதர்களிடமே மண்ணைக் கௌவிவிட்டனர்! அதுபோலவே, திருவள்ளுவரின் குறள்களைப் புகழ்ந்து போற்றிக் கையாளாத புலவர் பெருமக்களே தமிழகத்தில் இல்லை என்றாலும், இறுதியில் கம்பர் முதலாய பெரும் பெரும் புலவர்களுங்கூடச் சமஸ்கிருத தாசர்களாகிப் பார்ப்பனப் புராணங்களிடமே மண்டியிட்டுவிட்டனர்!!

ஆதலாலேயே, ஆரிய வேதமத சாஸ்திரங்களின் மீது திருக்குறள் கொண்டுள்ள வெறுப்பு வெகுவாகப் பொதுமக்களிடம் பரவிப் பயன் தர ஏதுவில்லாமல் போய்விட்டது. எனினும், இரண்டொரு சங்கப் புலவர்களேனும் திருவள்ளுவரைத் தத்தம் இலக்கியங்களில் ஆங்காங்கே மின்னல்த் தோன்றி மறைவது போல், படம் பிடித்துக் காட்டிவிட்டே சென்றுள்ளனர்.

உதாரணத்திற்காக, மதுரைக் கூளவாணிகன் மகன் 'சீத்தலைச் சாத்தனார்' இயற்றிய "மணிமேகலை"யில் உள்ள ஒரு பாடலையேனும் கூர்ந்து கவனிப்போம்:

"தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் பெருமழை என்றவ்
பொய்யில் புலவன் பொருளுரை தேராய்
பிசியும் நொடியும் பிறர்வாய்க் கேட்டு
விசிபிணி குழுவின் விழாக்கோள் விரும்பிக்
கடவுட் பேணல் கடவியை யாகலின்
மடவரல் ஏவ மழையும் பெய்யாது
நிறையுடைப் பெண்டிர் தம்மே போலப்
பிற நெஞ்சு சுடுஉம் பெற்றியு மில்லை
யாங்கவை யொழிகுவை யாயினாயிழை
ஓங்கிரு வானத்து மழையுநின் மொழியது
பொட்டாங்கு ஒழுகும் பெண்டிரைப் போலக்
கட்டாதுன்னை என்கடுந் தொழிற் பாசம்."

இவ்வாறு ஒரு பூதம், ஒரு பெண்ணைப் பார்த்துக் கூறுவதாக இயற்றப்பட்டுள்ளது! அதில் வரும் பூதம் முதலிய கூற்றுக்கள் பகுத்தறிவுக்குப் புறம்பானதாக இருப்பதால், அவற்றை ஒதுக்கித் தள்ளிவிட்டு, நம் வள்ளுவரின் குறள் ஒன்றுக்கு அச்சீத்தலைச் சாத்தனார் தரும் காட்சியை மட்டும் காண்போம்!

அப்பெண் மணமான மங்கை. ஓர் ஓடையில் நீராடிக்கொண்டு இருக்கும்போது, அங்கு வந்த ஒரு இளவரசன் அவளிடம் தகாத நட்புக் கொள்ளத் தவிப்பதாகக் கூறுகிறான். அதைக் கேட்டு வருந்திய அவள், உடனே அவ்விடத்தைவிட்டு அகன்று, அந்நகரத்தின் நாற்சந்தி ஒன்றிலே வசிக்கும் ஒரு பூதத்திடம் சென்று, "ஏ, பூதமே! நான் என் மனதாரக் கற்புத் தவறியவளேயல்ல! என்றாலும், பொய்யாமொழிப் புலவராகிய திருவள்ளுவர் கூறிய, 'நிறையுடைய பெண்டிர் பிறநெஞ்சு சுடும்' பெற்றியை நான் இழந்துவிட்டதாலன்றோ, ஒரு இளவரசன் என்னைக் கண்டதும், அவன் மனம் கொஞ்சமும் கூசாமல், தகாத நட்புக்கு அழைக்கும்படி நேர்ந்தது? எனவே, எப்படியோ - எங்கோ என்னை அறியாமல் என் கற்புத் தவறி இருக்கவேண்டும்! ஆதலால், குற்றம் செய்வோரைக் கொல்லும் பூதமே, நீ என்னைக் கொன்று தின்றுவிடு" என்கிறாள்.

அவற்றைக் கேட்டுத் தெரிந்துகொண்ட பிறகுதான், அப்பூதம் மேற்கண்டவாறு பாடுவதாகச் சீத்தலைச் சாத்தனார் கற்பனை செய்துள்ளார்! இனி, அப்பாடலின் உரையைக் கவனிப்போம்:

"பெண்ணே! (ஆரியக் கயவர் கற்பித்த) தெய்வத்தைக் கருதாமல், கணவனைக் கருதி வாழ்பவளே, பெய்யெனப் பெய்யும் மழைக்கு ஒப்பாவாள் என்று இயம்பிய பொய்யா மொழிப் புலவருடைய வாய்மையை அறியாமல், அன்னியர்களாகிய ஆரியர்களின் பொய் பித்தலாட்டப் புராணப் புளுகு மூட்டைகளை நம்பி, அந்நாடோடிக் கூட்டத்தின் தேர்த் திருவிழாக்களில் நீயும் கலந்துகொண்டு, கடவுளைத் தொழப் போனாய் ஆதலால், பெண்ணே! நீ உன் கணவனுக்குப் 'பெய்யெனப் பெய்யும் மழைக்கு' ஒப்பானவள் அல்ல; கற்புடைய மங்கையைப் போல் உன்னை எவரும் கருதவும் மாட்டார்கள். (காரணம், தேர் திருவிழாக்களுக்குச் செல்லும் பெண்கள் தங்களை மிகவும் பகட்டாக அலங்கரித்துக் கொண்டு, தாசிகளுக்கும் தங்களுக்கும் தோற்றத்தில் யாதொரு வித்தியாசமும் காண முடியாமல் திரிகிறார்கள்; கோவில்களின் சுவர்களிலும், தூண்களிலும் கலையின் பேரால் காமத்தைத் தூண்டும் ஏராளமான லீலாவினோதச் சிற்பங்களும், சிலைகளுமே செதுக்கப் பட்டுள்ளன; அந்தக் கொக்கோகச் சித்திரங்கள் ஒரு பெண்ணின் கண்களைக் கவர்ந்துள்ள சமயம், அவளை ஒரு ஆண் அதே இடத்தில் அவன் கண்களால் அவள் கண்களைச் சந்திக்கும்படி நேர்ந்துவிடுமாயின்,

அவ்விருவர் நெஞ்சின் நிறையும் குறையுமன்றோ ?) ஆகவே, இத்தகைய இழி நிலையை ஏற்படுத்தும் அந்தத் தேர் திருவிழாக்களையும், கடவுள் தொழுகையையும் அறவே ஒழித்துவிடுவாயாயின், நீயே உன் கணவனுக்குப் 'பெய்யெனப் பெய்யும் மழை' ஆவாய். இதுவரை நீ அறியாத்தனமாய் செய்தவற்றிற்காக தண்டனை கிடையாது'' என்றதாம்.

மேற் கூறப்பட்ட நிகழ்ச்சிமூலம் அதன் ஆசிரியர், திருக்குறளின் உண்மையான-உயர்ந்த தன்மையான பகுத்தறிவுக் கோட்பாட்டைத் தெளிவாகப் புரிந்துகொண்டதோடு, தமது நூலின் வாயிலாகவும் தக்க விதமாகப் புரியச் செய்த பெருமைக்கும் உரியவராவார்.

உண்மையிலேயே திருக்குறள் நூல், பார்ப்பனர்களையும், அவர் தம் பூசை புனஸ்காரங்களையும் மிக வன்மையாகக் கண்டித்தும், வெறுத்துமே வந்துள்ளது என்பதற்கு உதாரணமாக இன்னும் சில குறள்களை வேண்டுமானாலும் இங்கு முக்கியமாகக் குறிப்பிடலாம் :

'' பிறப்புஒக்கும் எல்லா உயிர்க்கும்; சிறப்புஒவ்வா
செய்தொழில் வேற்றுமை யான்.''

உரை :- பிறவியினால் (பார்ப்பனர்) உயர்ந்தவர் என்றோ, பிறவியினால் (பார்ப்பனரல்லாதார்)தாழ்ந்தவர் என்றோ இல்லை. தொழிலினால் எவரும் சிறந்தவராகவோ, சிறப்பற்றவராகவோ இருக்கலாம்.

'' பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம்
கருமமே கட்டளைக் கல்.''

உரை :- பெருமை படுத்தத் தக்கவரா, சிறுமை படுத்தத் தக்கவரா என்பது (பார்ப்பனரா, அல்லவா என்பதை பொருத்ததல்ல) நல்ல நடவடிக்கை உடையவரா, அல்லவா என்பதை மட்டுந் தான் பொருத்ததாகும்.

'' சிறப்பொடு பூசனை செல்லாது வானம்
வறக்குமேல் வானோர்க்கும் ஈண்டு.''

உரை :- மழை பெய்யாமல் வரண்டுபோனால், (பார்ப்பனர் புளுகும்) வானவர்க்குக் கற்பிக்கப்பட்ட சிறப்புச் சாயம் வெளுத்துப் போகும்; பூசை புனஸ்காரமும் செல்லுபடியாகாது ; கோவில் குளங்களும், தேர் திருவிழாக்கள் இன்றிப் பாழடைந்து போகும்.(அவ்வாறேபல கோவில்கள்பாழடைந்தும் போயின.)

'' தானம் தவம் இரண்டும் தங்கா வியன்உலகம்
வானம் வழங்கா தெனின் ''

உரை :- மழை பெய்யாவிடில், (பார்ப்பனர்களுக்குத்) தானம் கொடுக்கிற ஏமாளித்தனமும், (பார்ப்பனர் புரிகிற பித்தலாட்டங்களாகிய யாகம்,) தவம் ஆகியவையும் ஒழிந்து போகும். (ஆதலால், பஜனை செய்தால், மழை பெய்யும் என்பது சுத்தப் பைத்தியக்காரத்தனம்.)

" நீரின் றமையா துலகெனின் யார்யார்க்கும்
வானின் றமையா தொழுக்கு."

உரை :- எப்படிப்பட்டவர்க்கும் நீர் இல்லாமல் வாழ முடியாதது போலவே, மழை (செல்வம்) இல்லையானால் (மனுநீதி தர்ம சாஸ்திரங்களாலோ — வேத மந்திரங்களாலோ — கற்பனைக் கடவுள் பக்தியாலோ) ஒழுக்கத்தை நிலைநாட்டிவிட முடியாது.

இவற்றைவிடத் தெளிவாக ஆஸ்திகத்தைக் கண்டித்தும், நாஸ்திகத்தை - பகுத்தறிவின் பெருமையை விளக்கியும் எவரால் எடுத்தெழுத முடியும் ?

புராதனகால இந்திய சரித்திரத்தை மார்க்ஸீய கண்ணோட்டத்துடன் பரிசீலனை செய்து, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் ஸ்தாபகர்களில் ஒருவராகிய திரு. **எஸ். ஏ. டாங்கே** எழுதிய " பண்டைக்கால இந்தியா" என்ற நூலிலே காணப்படும்,'ஆரியரின் தோற்றம்' என்ற அத்தியாயத்தில் குறிக்கப்பட்டுள்ள முக்கியமான சில குறிப்புகளை இங்கு ஒப்பு நோக்கி உணர்வோமாக;

"இந்திய-ஆரியன் தன் ஆதிகால சமூக வாழ்வின் எண்ணத்தை, **ரிக்குகள்** எனப்படும் வேத ஸ்லோகங்களிலும், அவற்றிலிருந்து எழுந்துள்ள சாஸ்திரங்கள் அனைத்திலும் நிலைநிறுத்தினன். வேதசாஸ்திரங்களைத் தொடர்ந்து புராணங்கள் உருப்பெற்றன. அப்பொழுது அவற்றை ஒப்பு நோக்கின், காட்டுமிராண்டி காலத்திலிருந்து நவீனகாலம் ஏற்பட்டதாகத் தோன்றும். அப்பால், சூத்திரங்கள், ஸ்மிருதிகள் முதலியவை உருப்பெற்றன.

இந்து அல்லது ஆரிய சமூகத்தின் வேதியர்கள், அந்த வேத மந்திரங்களை, அவற்றிற்கு உரிய திட்டமான உச்சரிப்புகள், லயங்கள், கிரியைகள் ஆகியவற்றுடன் தலைமுறை தலைமுறையாக, வாய்மொழி மூலமே காப்பாற்றிவந்தனர்; அவ்வாறு, குறைந்தது நாலாயிரம் ஆண்டுகளாவது நடை பெற்றிருக்கும்! இறுதியில், அம்மந்திரங்கள் ஏடுகளில் எழுதப்பட்டன; அவற்றிற்கு விமர்சன-வியாக்கியானங்களும் செய்யப்பட்டன'

அவ்வாறாகவே அவற்றிற்கு அழிவு ஏற்படாமல் காப்பாற்றப் பட்டன. மனித சமூகத்தின் நன்மைக்காகவோ, சரித்திரத்தின் நன்மைக்காகவோ அந்த ஆரியர்கள் அவற்றை அவ்வாறு தலைமுறை தலைமுறையாகக் கற்றுக் காப்பாற்றி வரவில்லை என்பதில் சந்தேகமே இல்லை.

சுமார் கி. மு, 1500-ல் அந்த வேத சாஸ்திரங்கள் ஆரிய இந்து சமூக முழுமைக்கும், சமையத்தின் ஆசார விதிகளாக ஆகிவிட்டன. மேலும், ஆரியர்களுடைய வரலாற்றின் அந்தக் கட்டத்தில், அவ்வேத மந்திர சாஸ்திரம், பார்பனப் புரோகிதர்களுக்குப் பிழைப்பு மார்க்கமாக ஆகிவிட்டது. அதனால்தான், அந்த ஆரிய வேத சாஸ்திர புராணங்கள் சமுதாய, உண்மையாக நீடித்திருக்க முடியாதபோதும், அவை விடாமுயற்சியுடன் பாதுகாக்கப்பட்டுள்ளன.''

எனவே, ஆரிய வேதங்களையும் சாஸ்திரங்களையும் புராணங்களையும் எதற்காகத் திராவிட கழகமும், திருக்குறளும் வெறுத்துத் தள்ளுகின்றன என்பதை இனியேனும் ஒவ்வொரு பகுத்தறிவுள்ள மானிடப் பிறவியும் புரிந்து கொள்ளலாமல்லவா ?

7. திருக்குறள் விருப்பு:

சமத்துவம் சகோதரத்துவம், தனியரசு தொழிலாளராட்சி, பொதுவுடைமை ஆகிய இவ்வைந்து கொள்கைகளும் திருக்குறள் கொள்கைகளேயாகும்! அவற்றை அறிய, முறையே 'ஒப்புரவறிதல்,' 'சுற்றந்தழால்,' 'குடிசெயல்வகை,' 'உழவு,' 'இறைமாட்சி' ஆகிய ஐந்து அதிகாரங்களையும் ஆராய்ச்சிக் கண்ணோட்டத்தோடு ஆராய்ந்து பார்க்கவேண்டும்.

தமிழகத்திற்கே உரித்தான ஒரு தனிச் சிறப்பு வாய்ந்த பண்பாடும், அரசியலும், பொருளாதார வணிக வளமும் அமைந்து தலைசிறந்து வாழ்ந்த நாடு நமது திராவிடநாடு, அல்லது தென்னாடு. இதன் உண்மையான வரலாற்றுச் சுவடிகளாகிய தலைச்சங்க-இடைச்சங்க இலக்கிய ஏடுகளில் பெரும்பாலானவற்றைக் கடற்கோளாலும் அன்னியர் சூழ்ச்சிகளாலும் நீரிலும் நெருப்பிலும் இழந்துவிட்டோம்.

மிஞ்சிய மிச்ச மீசுர ஏடுகளில் காணப்படும் அரசியல், பொருளியல் கருத்துக்களின் உயர்வுகளையும் அறத்தின் பெருமைகளையும், மறவர்களின்-மாவீரர்களின் வெற்றி முழக்கங்களையும், வீராங்கனைகளின் காதல் பெற்றிகளையும் கற்குந்தோறும் கற்குந்தோறும், ''காதறுந்த ஊசியும் வாராதுகாண் கடைவழிகே'' என்று ஒப்பாரியிடும் வியர்த்தனும் விறுவிறுப்பும் சுறுசுறுப்பும் ஒருங்கே பெற்று விரைவான், அப்பண்டைத்

தமிழகத்தை மீண்டும் பெற்று, அதில் ஒரு நாழிகையேனும் வாழ்ந்து விட்டுத்தான் மடியவேண்டும் என்ற ஆசையால் தூண்டப்பட்டு எனின், **'அறம் - பொருள் - இன்பம்'** ஆகிய மூன்றைமட்டுமே விரும்பும் திருவள்ளுவரின் விருப்பம், எத்தகையதாக இருந்திருக்கக்கூடும் என்பதைத் திருக்குறளில் தேடிக் கண்டுபிடிப்பதும் ஒரு கடினமாமோ?

திருவள்ளுவர் காலத்துக்கும் மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு! அஃதாவது, (கி. மு. 3000-ல்) இன்றைக்குச் சுமார் ஐயாயிரம் ஆண்டு களுக்கு முன்பே தமிழகத்தில் தமிழ் மக்கள் தலை சிறந்த நாகரீகம் உடையவர்களாய் வாழ்ந்தனர் என்பதற்குப் போதிய ஆதாரங்கள் உள்ளன.

கி. பி. 1887-ல் டாக்டர் சேஸ் என்பவர் நிகழ்த்திய 'ஷிப்பர்ட். சொற்பொழிவில், 'கி. மு. 3000-த்தில் திராவிடத்திற்கும், பாபிலோனியா விற்கும் வியாபாரத் தொடர்பு இருந்ததாகக் குறிப்பிட்டுள்ளார்! அதற்குச் சான்றாகத் தமிழ்ச் சொற்களாகிய தோகை, அகில், அரிசி, இஞ்சிவேர் ஆகியவைகளைத் துகி, அகாலிம், அரிஸா, ஜிஞ்சிபேர் என ஹீப்ரு - கிரேக்க மொழிகளில் வழங்கப்படுகின்றன என்பதையும் வரலாற்று வல்லுநர்கள் எடுத்துக் காட்டுகின்றனர்!!

'பெரிபூளுஸ்' என்ற கிரேக்க நூலிலும், **பிளினி, டாலமி** முதலியோர் எழுதிய ஏனைய நூற்களிலும் தமிழ் சொற்கள் பெருவாரி யாகக் காணப்படுவதாக **டாக்டர் கால்டுவெல்** கூறியுள்ளார்

கி. மு. 800-ல்கூடத் தமிழகத்திற்கும் மேலை நாட்டிற்கும் இடையே வர்த்தகம் வெகு சிறப்பாக நடைபெற்றிருந்தது என்பதை **ஜே. கென்னடி** என்பவர், தான் எழுதிய நூலில் விவரித்துள்ளார்.

"ஊர்" என்ற பெயருடைய கல்தேயர் நாட்டிலும், பாபிலோனியா வின் அரசனாகிய 'நேபுகாத்நேச்சார்' என்பவனுடைய அரண்மனையிலும் மலையாளத்தின் தேக்கமரங்கள் கொண்டுபோய் பயன் படுத்தப் பட்டுள்ளனவாம்!

நம் சோழ மண்டலத்திலிருந்து கொண்டு போகப்பட்ட 'நுண்பூங் கலிங்கத்தை' (மெல்லிய ஆடையை), ரோமாபுரிப் பருவ மங்கைகள் தம் உடல் உறுப்புக்கள் எல்லாம் நன்கு வெளியே தெரியும்படி உடுத்திக் கொண்டு, நாணமின்றித் திரிகிறார்களே! என்று, ஒரு ரோமாபுரி வரலாற்று ஆசிரியர் வருந்தி எழுதியுள்ளார்!!

மற்றொரு பேராசிரியராகிய 'பிளினி' என்பவரும்: "தமிழகத்தில் இருந்து கொண்டுவரப்படும். விளாமிச்சவேர் தைலத்தில் குளித்தும், தமிழகப் பட்டாடைகளை உடுத்தியும், தமிழக முத்துக்களை அணிந்தும்,

தமிழ் நாட்டு மலைப் பாம்புகளைத் தோளிலும், கரத்திலும் மாட்டிக் கொண்டும், தமிழ்க் காட்டுக் கிளிகளை உண்டும் உரோமாபுரி மக்கள் வாழும் நாகரிக வாழ்க்கையினால், ஆண்டுதோறும் உரோம சாம்ராஜ்யத்திலிருந்து எழுபதினாயிரம் பவுன்கள் தமிழகத்திற்குச் சென்று விடுகின்றனவே?'' என்று எழுதி இருக்கின்றார்.

அத்தகைய நம் தமிழ்த்திராவிடம் மேலைநாட்டோடு மட்டுமின்றிக் கீழை நாடுகளாகிய இந்தோனீசியா, மலேயா முதலியவற்றுடனுங்கூட வியாபாரத் தொடர்பும், பண்பாட்டுத் தொடர்பும் கொண்டிருந்திருக்கின்றது என்பதற்கும் போதிய ஆதாரங்கள் உள்ளன.

மலைகள் நிறைந்துள்ள அந்நாட்டிற்கு 'மலேயா' என்ற பெயரைத் தமிழகமேதான் சூட்டியுள்ளது! 'சாவகம்' தமிழரின் குடியேற்ற நாடு!! அதிலுள்ள **போரபுதூர்** என்ற ஏழு மாடக் கோபுரம் திராவிடக் கலையின் சிகரமாகும்!!! அத்தகைய போரபுதூரிலும், மதுரைப் பொற்றாமரைக் கரையிலும் ஒரே மாதிரியான சித்திரங்கள் தீட்டப்பட்டுள்ளன; அவை, 'கடல் அலைகளின்மீது பெருமிதமாகச் செல்லும் மரக்கலம் ஒன்றின் ஓவியமாகும்.'

திராவிட மரக்கலங்கள் மூன்று பகுதிகளாகக் கட்டப்பட்டிருந்தனவாம்! ஒரு பகுதிக்குப் புயலாலோ, புனலாலோ சேதம் ஏற்பட்டால், மற்றப் பகுதிகள் பத்திரமாகக் கரை சேருமாறு செய்யப் பட்டிருந்ததாக **'நிக்காலோகாண்டி'** எனும் மேலை நாட்டு ஆராய்ச்சியாளர் எழுதியுள்ளார்.

திசைகாட்டும் கருவிக்கு, திராவிட மாலுமிகள், ஒரு வகை எண்ணெய்ப் பாத்திரத்தினுள், எப்போதும் வடதிசையையே நோக்கித் திரும்பிக் கிடக்கக்கூடிய மீன் உருவத் தலையாலாகிய ஒரு மீன்பொறியைப் பயன்படுத்தினார்கள் என்றும் தெரிகிறது.

பண்டைத் தமிழ் உலகாகிய **'லெமூரியா'** கண்டத்தின் பூகோள அமைப்பு வரலாற்றைக் கூர்ந்து ஆராய்ந்து பார்த்தால், இவ்விந்திய உபகண்டம் அதன் நடுமத்தியில் அமைந்து, பூலோகத்தின் ஏனையப் பகுதிகளோடு வர்த்தகத் தொடர்பும், பண்பாட்டுத் தொடர்பும் கொள்ள வசதியாக இருந்தது விளங்கும்! அந்த வரலாற்றின் மூவாயிரம் ஆண்டுகளில் அது தன்னிகரற்ற அரசர்களையும், அறிஞர்களையும், மாவீரர்களையும், மரக்கலவீரர்களையும் பெற்றெடுத்திருக்கின்றது! பெரிய பெரிய சாம்ராஜ்யங்களைப் படைத்திருக்கின்றது! போராட்டங்களையும் நடத்தி இருக்கின்றது! புதிய புதிய அரசியல் அமைப்புகளையும் உருவாக்கி இருக்கின்றது என்பதோடு மட்டுமின்றி, ஏகபோகமான **'கடலரசி'**யாகவும் விளங்கி இருக்கின்றது என்பனவற்றை எல்லாம் எளிதில் அறியலாம் என்பதை **'டாக்டர் ராதாகுமுத்முகர்ஜி'** போன்றோர் எழுதிய நூல்களிலும் காணலாம்.

நமது இளங்கோவடிகள் எழுதிய சிலப்பதிகாரத்தின் பாடல்கள் ஒன்றிலே, **"நெடியோன் குன்றமுந் தொடியோள் பௌவமும், தமிழ் வரம்பறுத்த தண்புனனுடு"** என்றுள்ளது! இந்தத் **'தொடியோள் பௌவம்'** என்பதற்கு விளக்கம் கூறும் 'அடியார்க்கு நல்லார்,' "பஃறுளி ஆற்றுடன் பன்மலை அடுக்கத்துக் குமரிக்கோடு கொடுங்கடல் கொள்ள" எனும், சிலப்பதிகர்ரத்தின் மற்றோர் பாடலையும் ஆதாரமாக வைத்துப் பின் வருமாறு கூறுகிறுர்; 'தலைச் சங்கம் இருந்த காலத்தில் பாண்டியனின் தென்பாலி முகத்திற்கு வட எல்லையாகிய பஃறுளி ஆற்றுக்கும், குமரி ஆற்றுக்கும் இடையே எழுநூறு காத தூரம், அந்த ஆறுகளின் நீர் பாய்ந்து செழிப்புற்று விளங்கிய ஏழு தெங்கநாடும், ஏழு மதுரை நாடும், ஏழு முன்பாலை நாடும், ஏழு பின்பாலை நாடும், ஏழு குன்ற நாடும், ஏழு குணகாரை நாடும், ஏழு குறும்பனை நாடும் ஆகிய மொத்தம் நாடுகள் நாற்பத்தொன்பதையும், குமரி கொல்லம் முதலிய பன்மலை நாட்டையும், காட்டையும், நதியையும், பதியையும், தடநீர்க் குமரி வடபெரும் மலையையும் கடல் பொங்கி அழித்துவிட்டமையால், 'வட வேங்கடம் தென்குமரி யாயிடைத் தமிழ்கூறு நல்லுலகம்' சிதைந்து குறுகிச் சின்னுபின்னப் பட்டுள்ளது."

அத்தகைய மாபெரும் தமிழ் உலகத்தைத்தான் 'லெமூரியா' (LEMURIA) கண்டம் என்று மேலைநாட்டு ஆராய்ச்சியாளரும் கூறுகின்றனர்! அந்தக் காலத்தில், இமயமலைப் பிரதேசம் கடலாகவும், இந்துமா கடல் தரையாகவும் இருந்திருக்கிறது! தென்மேற்கில்; மடகாஸ்கர் தீவு ஆப்ரிக்காக் கண்டத்துடனும், தென் கிழக்கில்; இந்தோனீசியத் தீவுகள் ஆஸ்திரேலியாக் கண்டத்துடனும் இணைந்து, வடக்கில்: விந்தியமலை வரையிலும் விரிந்து பரந்த 'குமரிக்கண்டமாக' இருந்திருக்கிறது என்றும் கூறப்படுகின்றது!! அக் கண்டத்தின் நான்கு திக்கிற்கும், நான்கு திசைப் பெயர்களும் ஏற்பட்டுள்ளன!!! அவை; மேற்கே, பஃறுளி - குமரி ஆறுகளின் நீர் பாய்ந்து நிகரற்ற செழிப்பு வாய்ந்திருந்ததால், **'பெருவள நாடு'** அல்லது தலைச்சங்கத்தை உடைய தமிழ்நாடு என்றும்; தெற்கே, தென் கடலுக்கும், பஃறுளி ஆற்றுக்கும் இடையில் உள்ள நிலபாகத்திற்குத், **'தென்பாலி நாடு'** என்றும்; கிழக்கே உள்ள நில பாகத்திற்கு **'நாகை நாடு'** என்றும்; வடக்கே, குமரி முதல் விந்தியம் வரையில் உள்ள நிலபாகத்திற்குத் ***'திராவிட நாடு'*** என்றும், பெயர் பெற்றுள்ளனவாம். அவ்வாறு நான்கு திக்குகளிலும் நால் வகைப் பெயர் பெற்றுள்ள அந்நானிலம் ஒவ்வொன்றும், அவற்றின் பயிர்த் தொழில்களுக்கு ஏற்ப ஐவகைக் கூறு நிலங்களாகவும் வகுக்கப்பட்டனவாம்! அவை; முறையே மருதம், முல்லை, பாலை, நெய்தல், குறிஞ்சி எனவும் குறிப்பிடப்பட்டனவாம்!! ஆங்காங்கே, அதுஅதற்குத் தகுந்த பயிர்த் தொழில்களைப் புரிந்து உழைக்கும் உழவர்களே உலகின் மூலாதாரச் செல்வங்களைப் பெருக்கியவராவாராம்!!!

அத்தகைய உழவர்களுக்கும், அவர் தம் பயிர் நிலங்களுக்கும் தக்க பாதுகாவலர்களாய் அநேகக் குறு நிலத் தலைவர்கள் அல்லது மன்னர்கள் இருந்தனர்! அம்மன்னர்களுக்கு எல்லாம் தலைவனாக-மன்னர்மன்னனாகப் பெருவளநாட்டின் காவலன் விளங்கினான்!! அக்காவலன் அல்லது மன்னர்மன்னனின் மரபில் வழிவழியாய்த் தோன்றிய பரம்பரையையே **'பாண்டியர்'** என்று அழைக்கப்பட்டுள்ளது!!!

அவ்விதப் பாண்டியர் வழிவந்த மன்னர்மன்னர்களில் ஒருவன், தன் மக்களில் ஒருவனைத் தெற்கே உள்ள தென்பாலி நாட்டிற்கும், மற்றொருவனைக் கிழக்கே உள்ள நாகை நாட்டிற்கும், வேறொருவனை வடக்கே உள்ள திராவிட நாட்டிற்கும் அனுப்பியுள்ளான்! பின்னர், அம்மூவரின் சந்ததிகளே முறையே பாண்டிய-சேர-சோழர்களாய் ஆயினராம்!! 'தொன்மைப் புகழ் பூண்டது பாண்டிநாடு' என்று **'சேக்கிழார்'** பாடியதிலிருந்தும், **'பாண்டிய நாடே தமிழர் நாகரீகத்தின் பிறப்பிடம்'** என்று 'இத்தாலிய' வழிப்போக்கர் ஆராய்ந்து எழுதி இருப்பதிலிருந்துங்கூடப் பாண்டிய நாட்டின் பழமையும், பெருமையும் நன்கு புலனாகும்!!!

பண்டைக் காலத்தில் நாகரீகத்தில் மேம்பட்ட எகிப்தியர் 'பண்டு' என்னும் நாட்டிலிருந்து வந்தவர்கள் என்றும், அந்நாடு பாண்டிய நாடாக இருக்கலாம் என்றும் சில பேரறிஞர்கள் கருதுகின்றனர்.

காரணம், இன்றைக்குச் சுமார் 4300-ஆண்டுகளுக்கு முன்பு ஒரு முறை ஏற்பட்ட கடற்கோளால், ஆதிகாலத் தமிழர்களின் அறிவியல் நிலமாய்-நாகரிகத்தின் பிறப்பிடமாய்த் தலைச்சங்கம் அமைந்திருந்த பெருவளநாடு எனும், தென்மேற்குப் பாண்டியர் பூபாகம் அல்லது குமரிக் கண்டத்தின் ஒரு பெரும் பகுதி கடலுள் மூழ்கிவிட்டபோது, அதிலிருந்து தப்பிச் சென்றவர்களில் ஒரு பிரிவினர் எகிப்தியர்களாகி இருக்கலாம் என்று யூகிக்கப்படுகின்றது! 'ஆங்கிலோ - சாக்ஸர்களும்,' 'இந்தோ - ஆரியர்களும்' அவ்வாறு நாடு விட்டு நாடு, நாடோடிகளாய்ச் சென்று குடியேறியவர்களாவர் என்பது குறிப்பிடத் தக்கதாகும்.

பின்னர், கி. மு. 600-ல் மற்றொரு முறை ஏற்பட்ட இரண்டாவது கடற்கோளில் இடைச்சங்க காலத் தமிழகம், தனது பன்மலைகளோடும், பஃறுளி ஆற்றோடும் கடலில் மூழ்கிவிட்டதுவாம்!

இறுதியாக, கி. மு. 306-ல் மூன்றும் முறை ஏற்பட்ட கடற்கோளில் கடைச் சங்க காலத் தமிழகமும் கடலில் மூழ்கியதால், மிஞ்சிய தெற்கு எல்லை, இன்றுள்ள குமரி முனையே என்றாயிற்று. பரந்த பாண்டிய உலகிற்குப் பஃறுளி ஆற்றங்கரையில் அமைந்திருந்த **தென்மதுரை** தலைநகராக இருந்ததாம்! இடையில், **கபாடபுரம்** தலைநகராக ஏற்பட்டதாம்!!

கடைசியில், குறுகிய பாண்டிய நாட்டிற்கு வைகைக்கரையில் வாய்த்த மதுரை மாநகரம் தலைநகரானதாம்!!! கடைச் சங்க கால மதுரையின் அழிவுகளை இன்றைய மதுரை நகரின் தென்கிழக்கில், சுமார் ஆறுமைல் தொலைவிலே காணலாம்.

ஆகவே, அன்றொரு காலத்தில்-ஆரியர் வருகைக்கு முன்னர் சீரும், சிறப்பும், சிறந்த நாகரிகமும் பெற்று, அகில உலகமும் மெச்சும் பேரும் புகழும் திகழப் பெருவாழ்வு வாழ்ந்த பெருமைக்குரிய தமிழகத்தை மீண்டும் காண விரும்பியே நம் திருவள்ளுவர், தன் திருக்குறள் நூலில் அந்த ஐந்த அதிகாரங்களையும் இயற்றியுள்ளார் என்பதை எண்ணியே ஆராய்ந்து அறியவேண்டியது ஒவ்வொரு ஆராய்ச்சியாளரின் கடமையாகும்.

1. சமத்துவம்:

யாதொரு கைம்மாறும் கருதாமல்:- எதிர்பாராமல், மக்கள் சமுதாயத்திற்கு உதவிசெய்து, மக்கள் எல்லோரும் சமத்துவமான பலன் பெற்று, இன்புற்று வாழும்படி செய்வதே ஒப்புரவறிதலாகும்! அதனால் விளைவதே சமத்துவம்!!

'சமத்துவம்' என்பது, ஆரியக் கயவர்களின் மதக் கொள்கைக்கு நேர்விரோதமானது. கடவுள் தத்துதத்திற்கே சமத்துவம் கட்டோடு பிடிக்காது. கடவுள்கூட, அதைத் தொழுபவனுக்குச் சொர்க்கமும் அல்லாதவனுக்கு நரகமும் கொடுக்கக்கூடிய கைம்மாறுத் தன்மை உடையதாகவே கற்பிக்கப்பட்டுள்ளது, அதனால்த்தான், ஆதிகாலந் தொட்டு-மழை பெய்வது கடவுள் கிருபையால்த்தான் என்று எண்ணிய காட்டுமிராண்டி காலந் தொட்டுக் கடவுளுக்குப் பூஜை புனஸ்காரம் பஜனை பண்ணுவிட்டால், மழை பெய்யாது என்று எண்ணக்கூடிய ஈனப் புத்தி உடையவர்களாய் மதவாதிகள் இருந்து வருகின்றனர். இதை வள்ளுவர் வன்மையாகக் கண்டித்துள்ளார்.

'ஐந்து விரல்களும் ஒன்று போல் சமத்துவமாக இருந்துவிட்டால், எதற்கு உதவும்?, என்று சில அறிவிலிகள் கேட்பர்! இதுபோலவே, கூன் குருடு முடமானவர்களைக் காணும் சில அதிகப்பிரசங்கிகள், 'அவனுக்குக் கண்ணிருந்தால், உலகை அழித்து விடுவான் - இவனுக்குக் கால் இருந்தால், உலகை விற்றுவிடுவான் அதனாலேயே கடவுள் இவர்களை இப்படிப் படைத்துக் குறைத்துப் படியளக்கிறார்' என்றும் ஈனத்தனமாய் பொருப்பற்ற பேச்சுக்களைப் பேசுவதும் உண்டு!

இத்தகைய ஈனர்களே சமுதாயத்தில் சமத்துவத்தைக் காணச் சகியாத சமூகத் துரோகிகள் ஆவர். அநேகமாக மதக் கண்ணோட்டத்

தோடுச் சமுதாயப் பொருளியலைப் பரிசீலனை செய்பவர் அனைவருமே அத்தகைய அயோக்கியத்தனமான முடிவுக்கே அதி சீக்கிரத்தில் வந்து விடுகின்றனர். இதையும் வள்ளுவர் வெகு வன்மையாகவே கண்டித் துள்ளார் என்பதைத் தெளிவாக விளக்குவது தான், "**கைம்மாறு வேண்டா கடப்பாடு; மாரிமாட்டு என் ஆற்றுங் கொல்லோ உலகு?**" என்று தொடங்கி, "**ஒப்புரவி னல்வரும் கேடெனின் அஃதொருவன் விற்றுக்கோள் தக்க துடைத்து.**" என்று முடிக்கும் பத்து குறளடிகளுமாகும்.

(2.) சகோதரத்துவம் :

மாந்தர் தம் சகோதரத்துவத்தைக் காகங்களிடம் இருந்தேனும் கற்றுக்கொண்டிருக்கலாம்! ஆனல், ஆரியக்கயவர்கள் கற்பித்த 'மனு நீதி தர்ம சாஸ்திரம்' எனும் அநீதியான ஓரவஞ்சகச் சாத்திரத்திற்கு ஒப்புதலளித்ததால், தமிழர் தம் பரம்பரையே தாழ்ந்து - பலபட்டரை யாகப் பிரிந்து சகோதரத் துவத்தையே இழந்துவிட்டது.

காக்கை தனக்குக் கிடைத்தவற்றை, மறைத்து வைத்துப் பார்ப் பானைப் போல் தான்மட்டும் தனித்து உண்ணாது; சுற்றத்தைக் கூவி அழைத்து உண்ணும். அதுபோலவே, ஆரியம் புகுவதற்குமுன், தமி ழகத்தில் சமத்துவமும், சகோதரத் துவமும் சிறப்பாக நிலவி இருந்தன.

தமிழர் தம் இனத்தாரோடு மனம் கலந்து பழகும் சகோதரத்துவத் தன்மை இல்லாதவராய் ஆனதற்குக் காரணம், ஆரியக் கயவர்கள் கற்பித்த 'தீண்டாமை'-'பாராமை' ஆகிய வருணச்சாரக் கொடுங்கோன் மையேதான் என்பது யாவரும் அறிந்ததே!

அக்கொடுங் கோன்மையையும் வன்மையாகக் கண்டிக்க விரும்பியே வள்ளுவர், '**சுற்றந்தழால்**' என்னும் அதிகாரத்தில்; "**பற்றற்ற கண்ணும் பழைமைபா ராட்டுதல் சுற்றதார் கண்ணே யுள**" என்று தொடங்கி, "**உழைப்பிரிந்து காரணத்தின் வந்தானை வேந் தன் இழைத்திருந்து எண்ணிக் கொளல்**" என்று முடிக்கும் பத்துக் குறளடிகளிலும் விளக்கிக் கூறியுள்ளார்.

(3.) தனியரசு :

"வடவேங்கடம் தென்குமரியாயிடைத் தமிழ்கூறு நல்லுலகம்" எனும் நமது திராவிடநாடு, எக்காலத்திலும் தன்னிகரற்ற தனியரசாகவே திகழ்ந்துள்ளது! "...... **தெக்கணமும் அதிற்சிறந்த திராவிடநற் றிருநாடும்** ......" என்று பாடியுள்ளார் பேராசிரியர் சுந்தரனாரும்.

திராவிடநாட்டிற்கு வெளியே - வடநாட்டிற்குரிய ஆரிய மன்னர்களாய் வாழ்ந்த 'கனகனும்,' 'விசயனும்' திராவிடத்தை இழித்தும், பழித்தும் பேசினர் என்று கேள்விப் பட்டவுடனேயே, நம் திருவிடத்தின் மன்னர்களில் ஒருவன் **'சேரன் செங்குட்டுவன்'** புலியெனச் சீறிச் சென்று, அவ்வாரியக் கயவர்களை வென்று கல் சுமக்கச் செய்தான் என்றும், **'ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன்'** எனும் பாண்டியனும் இமயம் வரை சென்று வெற்றிக் கொடி பொறித்தனன் என்றும், **'கங்கைகொண்ட சோழன்'-கரிகாற் பெருவளத்தானும்** வடவரை வென்று வாகை சூடினவனே என்றும் நம் சங்க இலக்கியங்கள் முழங்குகின்றன.

19-ம் நூற்றுண்டின் ஆரம்பகாலம் வரையில் திராவிடநாடு வடநாட்டின் ஒரு பகுதியாக ஒரே ஆட்சியில் இருந்ததில்லை! கிருஷ்ணு நதிக்குத் தெற்கே 'அசோக' மன்னனின் சாம்ராஜ்யமோ, 'சந்திர குப்தனின்' செங்கோலோச்சோ நீண்டதில்லை!! கோல்கொண்டர் கோட்டையைக் கைப்பற்றியதும், 'ஔரங்கசீப்' கூட மாண்டுவிட்டான்!!!

வெள்ளையர் ஆட்சி வந்தபிறகுதான், திராவிடநாடு வடநாட்டுடன் படிப்படியாகப் பிணைக்கப்பட்டது. அதற்குக் காரணங்கூட, ஆரிய நய வஞ்சகரின் அரசியல் துரோகமேதான் என்பதை 'இந்து தேச சரித்திரம்' எனப்படும் (Indian History) 'இந்தியன் ஹிஸ்டரி'யிலேயே காணலாம்;

(அ) ''கௌடல்யன் அல்லது சாணக்கியன் என்ற பார்ப்பான், '**நந்த**' அரசனின் சேனைத் தலைவனுகிய சந்திரகுப்தனைத் தன் கைக்குள் போட்டுக்கொண்டு, எகிப்து மன்னனுகிய அலக்சாண்டருக்குத் தூது விட்டு ஒன்பதாவது நந்த அரசனை வீழ்த்தி, அத்தோடு நந்த வம்சத்தையே கருவறுத்து விட்டான்.''

(ஆ) ''அச்சந்திர குப்தனுடைய மௌரிய வம்ச அரசர்களில் ஒருவனுகிய '**பிரகத்திரத மௌரியா**' என்பவனைச் சதி செய்து கொல்வதற்காக, அவனுடைய சேனுதிபதியாகிய 'புஷ்யமித்திரன்' என்பவனுக்குப் பார்ப்பனர்களே, ஒரு அழகிய இளம் பார்ப்பனத்தியைப் பெண்டாள விட்டு, அச்சேனுதிபதியை மயக்கித் தம் கைக்குள் போட்டு அவனைக் கொண்டே அம்மன்னனைக் கொலை செய்துவிட்டு, அந்தச் சேனுதிபதியைச் சிம்மாசனத்தில் ஏற்றிச் 'ஜெய்விஜயீ பவா - சகல சம்பண்ண சித்திரஸ்தூ!' என்று கூறி பட்டம் சூட்டிவிட்டனர்.''

(இ) ''அப்பால், அப்புஷ்யமித்திர சங்கர் பரம்பரையாக, சுங்க மன்னர்கள் ஆண்டு வந்தனர். அவர்களில் பத்தாவது மன்னன் '**தேவபூதி**!' இவனுக்கும் பார்ப்பனர்களே சதி விளைத்தனர். அத் தேவபூதியின் மந்திரி

யாகிய 'வாசுதேவனுக்கு' அரச பதவி மோகத்தை முதலில் மூட்டினர் ஆரியர்; பிறகு, தேவபூதியின் மகளாகிய அரசிளங் குமாரியைப் போல் ஒரு பார்ப்பனப் பணிப் பெண்ணுக்கு வேடம் போட்டு அனுப்பித் தேவபூதியைக் கொலை செய்யச் செய்தனர். உடனே, வாசுதேவன் மன்னனுனன். பார்ப்பனக் குருக்கள் பூஜை செய்தனர். அம்மன்னனும், அவனுக்குப் பிறகு ஆண்ட மூன்று மன்னர்களும் அப்பார்ப்பனர் பரம் பரைக்குப் பலமான சலுகைகள் செய்திருக்கின்றனர்."

(ஈ) "'ஹர்ஷன்' என்ற மன்னன் புத்த மதத்தை ஆதரித்ததினுல், பொருமை கொண்ட பார்ப்பனர்கள் ஹர்ஷனையும் கொன்றுவிடச் சதி செய்தனர். ஒரு நாள் ஹர்ஷன் கங்கை நதிக்கரையில் உள்ள 'கனோர்ஜ்' என்ற இடத்தில் சகல மதக்காரர்களின் மாநாடு ஒன்று கூட்டினுன்! அச்சமயம் கங்கைக் கரையில் களிப்போடு உலாவிக் கொண்டிருந்த அவன் கண்களில் மிரட்சிக்குரிய காட்சி திடீரென்று தோன்றிற்று!! பார்ப்பனர்கள் புத்தர் மடத்தைத் தீயிட்டுக் கொளுத்திவிட்டுக் ஹர்ஷனைக் கட்டாரியால் குத்திக் கொல்லும்படியாகத் தம்மில் ஒருவனையும் அனுப்பி வைத்திருந்தனர்!!! ஆனுல், அக்கொலைகாரப் பார்ப்பான் உடனே கட்டாரியுங்கையுமாகப் பிடிக்கப்பட்டு, விசாரணை செய்யப்பட்டபோது, அவனேடு சம்பந்தப்பட்ட ஏனைய 500 பார்ப்பனர்கள் குட்டும் வெளிப் பட்டு, அவர்கள் எல்லோரும் கைது செய்யப்பட்டுக் கடுந் தண்டனை களும் விதிக்கப்பட்டனர்."

(உ) "கத்தியவார் மன்னனைப் பார்ப்பனர்கள் தம் மதத்தின் பேரால் அடிமைப்படுத்தி சதி செய்துகொண்டு இருப்பதை ஒற்றர்கள் மூலம் அறிந்ததாலேயே, ஆப்கானி தேசத்தரசன் '**கஜினி முகம்மது**' அப் பார்ப் பனர்கள் தம் மன்னனை மடையனுக்கி, அரசாங்கப் பொக்கிஷத்தையும், களஞ்சியங்களையும் கொள்ளையடித்துக் கொண்டு போய்ப் புதைத்து வைத்திருந்த சோமநாதபுரக் கோவிலின் மீது படையெடுத்து அதை முற்றுகையிட்டுக் கைப்பற்றி அப்புதையலை அங்கிருந்து கொள்ளை யடித்துக் கொண்டுபோனுன்.

அப்போது, கத்தியவார் மன்னனிடம் 4½ லட்சம் சைனியம் இருந்தும், பார்ப்பனர்களின் சதியினுலேயே, 25000 சைனியத்தோடு மட்டுமே வந்த கஜினியை எதிர்த்துச் சரியானபடி யுத்தம் புரிய முடியாமல்த் தோற்ருன்! பார்ப்பனர்களோ, வெற்றியடைந்த கஜினியையே வாழ்த்தி அவனுக்குப் 'பூர்ண கும்பம்' எடுத்துச் சென்றனராம்!! கஜினியோ, அவர்களை நம்பாமல் வெறுத்துப் பேசியதோடு, அப்புரோகிதப் பார்ப்பனர் எல்லோ ரையும் குதிரைப்படைக்குப் புல் பிடுங்கவும், அவர் தம் பெண்டிரைக் குதிரைப் படையினருக்கு வைப்பாட்டிகளாகவும் ஆக்கி அழைத்துக் கொண்டு சென்ருனும்."

(ஊ) "அப்பால், மீர்ஜாபருக்கு துர்ப்புத்தியைப் போதித்து முகலாய ராட்சியைக் கவிழ்த்தவனும் '**அமர்நாத்**' என்ற ஆரியனேதான்."

(எ) "மராட்டிய மன்னனுகிய வீர '**சிவாஜி**' யைக் கங்குப்பட்டன் எனும் பார்ப்பனனும், அவர் பரம்பரையைப் '**பீஷ்வாக்கள்**' எனும் பார்ப்பனர்களுமே அழித்து ஒழித்து விட்டனர்."

(ஏ) மைசூர் மன்னர்களுக்குள் பற்பல சதிச் செயல்களைப் புரிந்து கொண்டே இருந்து, கடைசியாக வெள்ளையருக்குத் திராவிட நாட்டைக் காட்டிக்கொடுத்தவன் '**பூர்ணய்யா**' என்னும் பார்ப்பன மந்திரியேதான்.

(ஐ) தஞ்சை மன்னர்களைச் சதி செய்து காட்டிக் கொடுத்தவனும் '**வெங்கண்ணு**' என்ற பார்ப்பனனேதான்.

(ஒ) வடநாட்டு இந்தியைத் திராவிட நாட்டில் வலுக் கட்டாயமாகத் திணித்து, மொழியடிமைப் படுத்த முயன்ற முதல் துரோகியும் **இராஜ கோபாலாச்சாரி** என்ற பார்ப்பனப் பிரதம மந்திரியேதான்.

(ஓ) கடைசியாகக், 'கரன்சந்திரமோகனதாஸ்' எனும் காந்தியடி களைக் கைத் துப்பாகியால் சுட்டுக் கொன்ற கொலைகாரனும் '**கோட்சே**' என்ற பார்ப்பனனேதான்.

எனவே, என்றைக்கு இந்த ஆரியப் பரம்பரை இந்திய உபகண் டத்துள் நுழைந்ததுவோ, அன்று முதல் அகில இந்தியாவிலும் உள்ள மக்கள் பரம்பரைக்குப் பற்பல விதமான கேடுகளும், குழப்பங்களும் சூழ்ச்சிகளும் மதத்தின் பேராலும், சமுதாயத்தின் பேராலும் அரசியலின் பேராலும் அடிக்கடி ஏற்பட்டுக்கொண்டே வந்துள்ளன.

வடநாட்டு இரஜபுத்திர மன்னர்களிடையே எந்தக் காலத்து ஒற்றுமை நிலவ விடாது, ஓயாத பகையை மூட்டிப் பார்ப்பனர் த பலத்தைப் பெருக்கிக் கொள்வதற்கு ஒரு சூழ்ச்சியாக அமைந்ததுதா '**அஸ்வமேதயாகம்!**' அதுபோல், திராவிட நாட்டில் பார்ப்பனர் புகுந் சூழ்ச்சிகரமான செல்வாக்கைத் தேடிக் கொண்ட பிறகு, மூவேந்தை யும் முட்டாள்களாக்கி பெரிய பெரிய கோவில்களைக் கட்டச் செய்து அதன் மூலம் '**மூவாயிரவர்**' '**அறுபத்து நாலாயிரவர்**' என்று பார் பனர் கும்பல் கும்பலாகக் கூடியிருந்து, பக்தியின் பேரால் பகற் கொள்ளை யடித்து நாட்டைப் பாழ்படுத்தி விட்டதினுல்த்தான், உலகம் முழுவது கவனம் செலுத்தித் திரைகடல் மீது உலாவி வந்த திராவிடன், திரு களின் குகை - கொலையாளிகளின் பலிபீடம் - குச்சுக்காரிகளின் விடு என்று பெரிய பெரிய மகான்கள், மகாத்துமாக்கள் என்று சொல்லப்ப பவர்களாலேயே வருணிக்கப்பட்ட கோவில்கள் எனும் குண்டுச் சட்டி குள் கொக்கோக லீலா விநோதச் சிலைகளைக் 'கலை கலை' எனத் தீட்டிக் கண் கொட்டாது கண்டு களிக்கும் பக்திக் குதிரை ஓட்டத் தொடங்கினுன்.

குண்டு குண்டாக மாதர் முலைகளைக் கற்சிலைகளில் தீட்டிக் கண்டு களிக்கும் மண்டுகளாக திராவிட மன்னர்கள் ஆக்கப்பட்டபோதுதான், பீரேங்கிக் குண்டுகள் செய்யக் கண்டு பிடித்துக் கொண்டுள்ள பறங்கியர் படை வர்த்தகக் கப்பல்களில் வந்து திராவிட நாட்டின் துறை முகங் களில் இறங்கிற்று பின்னர், பார்ப்பனத் துரோகிகளின் ஆதரவால், மறத் திராவிடர்களுக்குள் மாறுபாடுகள் ஏற்படச் செய்ததால் - கட்டப்பொம் மனை வெள்ளையர்க்குக் காட்டிக் கொடுக்க ஒரு குட்டப்பொம்மன் ஏற்படச் செய்ததால் - நாட்டை இழக்கும்படியான நரித் தந்திரத்திற்கு வீரசிங்கம் வீழ்ச்சியுறச் செய்யப்பட்டதால், படிப்படியாகப் பறங்கியர் ஆட்சி திராவிடத்தில் ஏற்பட்டது! என்றாலும், ஐநூறுக்கும் மேல்பட்ட துரோகிகளுக்குரிய எலும்புத் துண்டுகளாய் ஏராளமான சமஸ்தானங்களை யும், குறுநிலங்களையும் விட்டுக் கொடுக்காமல் வெள்ளையராலும் இவ் விந்திய உப கண்டத்தை ஏக போகமாக ஆள முடியவில்லை என்பதும் குறிப்பிடத் தக்கதாகும்!!

இறுதியில், இரண்டாவது உலக யுத்தத்தின் முடிவில், சைனாவில் புரட்சி ஏற்பட்டுக் 'கம்யூனிஸ்ட் நாடாக' ஆகியது போல், இந்திய உப கண்டத்திலும் ஏற்பட்டு விடுமோ என்று அஞ்சிய வெள்ளையர், தமக்கு நம்பிக்கையான பார்ப்பனர் - பணியாக்கள் ஆகியோரின் கரங்களில் ஆட்சியை ஒப்படைத்துவிட்டு விலகினர். என்றாலும், மூன்றாவது உலகப் போர் உண்டாகும்போது, இந்திய உபகண்டத்தையே யுத்தகளமாக உபயோகப்படுத்தவேண்டும் எனும் அவ்வெள்ளையரின் திட்டப்படியே தம் 'காமன் வெல்த்து'க்குக் கீழ்ப்பட்டதான குடியேற்ற நாட்டு அந்தஸ் தையே அளித்துள்ளனர்.

ஆகவே, இந்தச் சுதந்தரமும் பூரணமானதல்ல. இன்னும் வெள்ளை யரின் பிடியிலேயேதான் நாடு இருக்கின்றது! இந்த நாட்டை வெள்ளை யருக்குக் காட்டிக் கொடுத்தவர்களும், சுதந்தரப் போராட்டத்தின் போது, சுதந்தர இயக்கத்திற்குத் துரோகம் செய்து 'ஆகஸ்ட்டுத் துரோகி' என்று பட்டம் பெற்ற ஆச்சாரியார் பரம்பரையினருமே இன்று வெள்ளையரின் ஸ்தானங்களில் வீற்றிருந்து இந்நாட்டைப் பல துறை களிலும் கொள்ளையடித்துக் கொண்டிருக்கின்றனர்.

வெள்ளையர்கள், மேலே கூறப்பட்டுள்ள விதமான அசாதாரணச் சூழ்ச்சிகளின் மூலம் பார்ப்பனர் உதவியினால்த் தற்செயலாய்ச் சென் னையை முதலில் கைப்பற்றியதால்த்தான், திராவிடத்தில் வேரூன்றிக் கொண்டு, திராவிட மறவர்களைக் கொண்டே மற்றப் பகுதிகயுளைம் வட நாட்டையும் கைப்பற்ற முடிந்திருக்கிறது எனும் வரலாற்று உண்மையை உணரும்போது, உண்மையிலேயே வெள்ளையர், இந்தியாவுக்குச் சுதந் தரம் வழங்க விரும்பியிருந்தால், அதைத் திராவிட நாட்டிற்குத்தான்

முதலில் கொடுத்துவிட்டுச் சென்றிருக்கவேண்டும் என எவரும் எளிதில் அறிவர். ஆனால், அது உண்மையான சுதந்தரம் அல்ல; ஆதலினால்த்தான் திராவிட நாட்டை வடநாட்டிற்கு அடிமைப் படுத்தியபடியே விட்டுச் சென்றுள்ளனர்.

வெள்ளையர் சூழ்ச்சியை இந்திய முஸ்லிம்கள் எளிதில் கற்றறிந்தனர்! எப்படி எனில், அவர்கள் ஏற்கனவே பார்ப்பனர் சூழ்ச்சியாகிய இந்து மதத்தைத் தகர்த்தெரிந்து மதம்விட்டு மதம் மாறியவர்களும், மதமாற்றம் புரிந்தவர்களுமாய் இருந்தனர்!! எனவே, **'பாக்கிஸ்தான்'** எனும் சுதந்தரத் தனியரசு அமைத்துக் கொண்டனர்!!! என்றாலும், அது பூரணமாக அமையாததாலேயே, அங்கு காஷ்மீர் பற்றிய பிரச்சினை மூன்றாவது யுத்த மேகங்களைத் திரட்டிக் கொண்டிருக்கின்றது.

1947-ம் ஆண்டிலேயே வங்காளியர்கள் **'தனிவங்கக்குடியரசை'** அமைக்க விரும்பினார்கள்! இன்னும், சோட்டா நாகபுரி, கிழக்கு ஸ்டேட்ஸ், ஏஜென்ஸிப் பிரதேசங்கள் அடங்கிய ஜார்கண்டு நாடு **'ஆதிவாசிகள்'** எனப்படும் வடஇந்தியப் பூர்வகுடிகளின் சுதந்தரத் **'தனியரசாக'** அமையவேண்டும் என்பது அவர்கள் விருப்பமாய் இருந்துகொண்டிருக்கிறது!!

நம் விருப்பம், நமது திராவிடம் சுதந்தரத் 'தனிக் குடியரசுகளாக'த் திகழவேண்டும் என்பதுதான். எப்படி எனில், ஆந்திரத் தனியரசு, தமிழகத் தனியரசு, கருநாடகத் தனியரசு, கேரளத் தனியரசு, துளுவத் தனியரசு ஆகிய ஐந்து தனிக்குடியரசுகளும் தத்தம் தனித்துவ உரிமைப் பாதுகாப்புகளுடன் கூடிய ஒரு ஐக்கியத் திராவிட இராச்சியங்களாக (United States of Dravidam) அமைந்திருக்க வேண்டும். வடநாட்டிற்கும் நமக்கும் இடையே எவ்விதமான ஆதிக்கமும் இருக்கக் கூடாது.

அரசியல், பொருளியல்' இராணுவவியல் மற்றுமுள்ள எல்லாப் பிரச்சினைகளிலும் 'ஐக்கியத் திராவிடம்' தனித்து இயங்கி, மீண்டும் உலகம் முழுவதும் திராவிடத்தின் புகழ் பரவச் செய்யவேண்டும் என்பதே நமது தமிழ் மறையாகிய திருக்குறளின் விருப்பம் என்பதை **'குடி செயல் வகை'** எனும் அதிகாரத்திலுள்ள பத்துக் குறளடிகளும் வெட்ட வெளிச்சமாய் விளக்கிக் கூறக் காணலாம்,

(4) தொழிலாளராட்சி :

ஐக்கியத் திராவிட இராச்சியங்களின் சட்டசபைகளிலும், ஆட்சி பீடங்களிலும் தொழிலாளர்களின் பிரதிநிதிகளே பெருவாரியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுத் தொழிலாளர்களே அமைச்சர்களாக அமர்ந்து ஆட்சி புரியும்படியான சூழ்நிலைகளை உருவகப்படுத்த வேண்டும். இது திருக்குறளின் விருப்பம் மட்டுமல்ல; பண்டைப் பாண்டிய உலகின் பண்பாடே அப்படித்தான் இருந்திருக்கிறது.

ஆரியரின் கயமைக் கலாச்சாரம் எனும் வருணச்சாரம் நயவஞ்சக மாகப் புகுத்தப்பட்ட பின்னர்தான், திராவிடத்தின் தொழிலாளர்கள் வஞ்சிக்கப்பட்டுத் தாழ்த்தப்பட்டவர்களாய் ஆக்கப்பட்டுள்ளனர்.

ஆதித்திராவிடர் ஆழ்த்தப்பட்ட காலந்தொட்டே, திராவிட நாட்டின் சீரும் சிறப்பும் சிதைந்து புதைந்து போக ஆரம்பித்துவிட்டது என்பதற்கு எடுத்துக்காட்டாக 'ஔவை' மூதாட்டியின் அரசியல் வெண்பா ஒன்றையும் ஆதாரமாகக் கூறலாம்! ஒரு அரசன், 'மந்திரியாக யாரை நியமிக்க வேண்டும்?' என்று கேட்டபோது, அவள் பாடியது:

" நூலெனிலோ கோல்சாயும் நுந்தமரேல் வெஞ்சமராம்
கோலெனிலோ வாங்கே குடிசாயும்—நாலாவான்
மந்திரியு மாவான் வழிக்குத் துணையாவான்
அந்த அரசே அரசு."

உரை :– **பார்ப்பானை மந்திரியாக நியமித்தால், அந்த ஆட்சியில் நீதியே இருக்காது! சத்திரியனை நியமித்தால், யுத்தத்தை உண்டாக்குவான்!! வைசியனை நியமித்தால், வரிக்குமேல் வரிப்போட்டுக் குடிமக்களை வாட்டி வதைத்துக் குடிகெடுத்துவிடுவான்!!! ஆதித்திராவிடனாகிய தொழிலாளியை மந்திரியாக்கினால், ஆட்சியைச் செம்மையாக நடத்தும் அருமையான அமைச்சனாகவும், பொதுவுடைமைக் குடியரசுக்குரிய நல்ல வழிகாட்டியாகவும் விளங்குவான். அத்தகைய தொழிலாளராட்சியை உடைய அரசே உண்மையான நன்மை பயக்கும் அரசாகும்.**

மேலே கூறப்பட்டவை, ஆதி காலத்து ஔவைப்பிராட்டியாரின் அநுபவக் கூற்றாகும். இனித் திருவள்ளுவரின் திருவாய் மலர்ந்தருளிய திருக்குறளடிகள் சிலவற்றைக் கவனிப்போம்;

" உழவார் உலகத்தார்க்கு ஆணிஅஃது ஆற்றாது
எழுவாரை எல்லாம் பொறுத்து."

உரை :- வேறு பிழைப்புப் பிழைக்கும் மற்றெல்லோருடைய வாழ்க்கைச் சக்கரங்களும் விவசாயத் தொழிலாளருடைய அச்சில் பொருத்தப்பட்டுத்தான் உருளவேண்டி இருப்பதால், அத்தொழிலாளரே மற்றெல்லோரையும் தாங்கும் அ(மை)ச்சு ஆவர்.

" பலகுடை நீழலும் தம்குடைகீழ்க் காண்பர்
அலகுஉடை நீழ லவர்."

உரை :- நெல்வளம் உடைய பயிர் பச்சையின் நிழலிலே வாழத்தக்க தான உழைப்பை உடைய தொழிலாளர், பல அரசரின் ஆட்சி களையும், தம் அமைச்சின் கீழ் காணவல்லவர் ஆவர்.

"உழவினர் கைம்மடங்கின் இல்லை விழைவதூஉம்
விட்டேம் என்பார்க்கும் நிலை."

உரை :- விவசாயத் தொழிலாளியுடைய கை, தொழில் செய்யாமல் இருந்துவிடுமானால், பற்றற்ற துறவி (எனப்படும் ஆரிய மகரிஷி) களுக்கும் கதி இல்லாமல் போய்விடும்! (ஆதலால், பார்ப்பன மகான்கள் எனக் கூறப்படுபவர்களையும் விட மிகவும் இன்றி யமையாதவன் தொழிலாளியே.)

"உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற்றெல்லாம்
தொழுதுண்டு பின்செல் பவர்."

உரை :- உழவுத் தொழில் செய்து வாழ்வாரே வாழ்பவர்-(மற்லெல்லோ ரையும் ஆள்பவர். அதனால்,) மற்றெல்லோரும் அத்தொழிலாளர் ஆட்சியைப் போற்றிப் புகழ்ந்து பணிந்து பின்தொடர்வதினால் கிடைக்கும் பலனைப் புசித்து வாழ்பவரே ஆவர்.

இவ்வாறெல்லாம் தொழிலாளர்களின் சிறப்பையும், ஆட்சியையுமே பெருமைப்படுத்திக் கூறிய திருவள்ளுவரின் விருப்பம் '**தொழிலாளர் ஆட்சி**' ஏற்படவேண்டும் என்பதுதான் என்று திருக்குறள் நூலில் உள்ள '**உழவு**' என்ற அதிகாரத்தில் வரும் பல குறளடிகளிலிருந்தும் விளங்கிக் கொள்ளலாம்.

(5.) பொதுவுடைமை:

1856-ல் '**கால்டுவெல்**' எனும் மேலைநாட்டுப் பேராசிரியர் எழுதிய '**திராவிட இலக்கணம்**' என்ற நூலில் நம் நாட்டின் பூர்வீகக் குடி களாகிய நம் மூதாதையரைப் பற்றியும், வடநாட்டின் பூர்வீகக் குடி களைப் பற்றியும் வெகு விளக்கமாக எழுதியுள்ளார்.

"ஆரியர்கள் வருவதற்கு முன்னால், திராவிடர்கள் இந்நாட்டில் வசித்து வந்தார்கள். திராவிடர்கள், ஆரியர்களைவிட நாகரீக வளர்ச்சி அடைந்த பௌதிக உற்பத்தி சாதனங்களைப் பெற்றிருந்தார்கள். திராவி டர்கள், ஆரியர்களை எதிர்த்து விடாப்பிடியாக போராடினார்கள். இறுதி யில், ஆரியர்களுடைய மித்திரபேத தந்திரங்களாலும், திராவிடர்களுக் குள் ஏற்பட்ட துரோகிகளாலும், திராவிடர்கள் ஆரியரால் தோற்கடிக் கப்பட்டார்கள்.

ஆரியரால் தோற்கடிக்கப்பட்ட திராவிடர்கள், ஆரிய மத சாஸ்திரங் களுக்கு அடிமையாகித் தமது பௌதிக—விஞ்ஞான அறிவை படிப்படி யாக இழந்து ஆரிய மயமாகி விட்டார்கள். ஆனால், அவர்கள் தம் மொழி யின் அடிப்படை அமைப்பை மட்டுமேனும் பாதுகாத்துக் கொண் டார்கள்!

மேற்கூறியவாறே மற்றும் பல ஆராய்ச்சியாளர்களும் எழுதியுள்ள னர். சுமார் ஐந்து லட்சம் ஆண்டுகளுக்கு முன்னால், ஆதிமூல மானிடப் பிராணியிலிருந்து மாந்தர் பரிணமித்தனர் என்று மானிடப் பிராணி ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர். பல்வேறு இடங்களில் கண்டு பிடிக்கப்பட்ட மிகப் புராதனமான எலும்புக் கூடுகளிலிருந்தும், எலும்பு களிலிருந்தும் அவ்வாராய்ச்சியாளர்கள் தம் கருத்துக்களை நிரூபித்துக் கொண்டுள்ளனர்.

கற்கருவி காலத்தைப் பற்றி நுணுகி ஆராய்ந்த 'பிரடரிக் எங்கல்ஸ்' எனும் ஆராய்ச்சியாளர், அக்காலத்தை மூன்று பெரும் பிரிவுகளாகப் பிரித்து விளக்கிக் கூறியுள்ளார். அவை, தலை - இடை - கடைக் காட்டு மிராண்டி காலங்கள் எனப்படும். அவற்றுள் கடைசிக் கற்கருவி காலம், அல்லது உலோகக் கருவியின் ஆரம்ப (திராவிடர்) காலத்தைப் 'புராதன பொதுவுடைமைச் சமுதாயம்' (Primitive Communist Society) என்று குறிப்பிட்டுள்ளார்.

ஆதிகாலத்தில் வாழ்ந்த அச்சமுதாயத்தின் சூழ்நிலையை ஆராய்ந்து பார்த்தால், அவர்கள் 'பொதுவுடைமைச் சமுதாயமாக' வாழ்வதைத் தவிர, வேறு வழியே இல்லாதவர்களாய் இருக்கவும் காணலாம்.

காடுகளில் உள்ள பிராணிகளை வேட்டையாடுவதற்கோ, கடல், ஆறு, ஏரிகளில் உள்ள மீன்களைப் பிடிப்பதற்கோ, காட்டை அழித்துத் தோட்டந் துரவுகள் ஆக்குவதற்கோ ஆதிகால மக்கள் ஒவ்வொருவராய் தனித்தனியே முயன்றிருக்க முடியுமா?

உழவர்கள் எல்லோரும் ஒன்று கூடியே உழைத்து நிலத்தைச் சமப் படுத்திப் பிறகு, உழுது, நீர்ப்பாய்ச்சி, விதை விதைத்தோ, பயிரிட்டோ வளர்த்துப் பாதுகாத்துப் பின் அறுவடை செய்த தானியங்களையும், காய் கறிகளையும் களத்துமேட்டிற்குக் கொண்டுவந்து அம்பாரமாக கொட்டிக் குவித்துக், கொட்டும் கொம்பும் முழக்கிக்கொண்டு, அவற்றைச் சுற்றி ஆனந்தக் கூத்தாடிக் களித்துவிட்டு, அப்பால் அவரவர் தேவைக்குத் தக்க அளவு பகிர்ந்து எடுத்துக்கொண்டு, எஞ்சியவற்றைப் பொதுக் களஞ்சியங்களில் போட்டுச் சேமித்து வைத்தனர்.

அவ்வாறே ஆதிகாலத்திராவிடர்கள் எல்லோரும் உழைப்பாளிகளாக வும், சமத்துவமும், சகோதரத்துவமும் உடைய பொதுவுடைமைக் கூட்

டுச் சமுதாயமுமாகவும் வாழ்ந்துவந்த அவர்களிடையே, பிற்காலத்தில் ஆரியச் சோம்பேறிக் கும்பல் வந்து புகுந்து குழப்பமும், கலக்கமும், யுத்தமும், சதியும் செய்து சாதித்த தீய சாதனைதான், தனிவுடைமைத் தத்துவத்தை உடைய வேத மத வேற்றுமைச் சமுதாயம் ஆகும். அவற்றை எல்லாம் நன்கு ஆராய்ந்து அறிந்த நமது திருவள்ளுவர், தமது விருப்பம் போல், மீண்டும் அந்தப் புராதனப் பொதுவுடைமைச் சமுதாயத்தைச் சமைப்பதற்கான வழிமுறையை வகுத்துத் திருக்குறள் நூலில் "**இறைமாட்சி**" என்ற அதிகாரத்தில் வெகு தெளிவாக விளக்கிக் கூறியுள்ளார்! எனவே, அவற்றில் சிலவற்றையும் கவனிப்போம்:

"அறன் இழுக்காது அல்லவை நீக்கி மறன் இழுக்கா
மானம் உடையது அரசு."

உரை:- அநீதியான (தனிவுடைமைத்) தத்துவத்தை நீக்கி, நீதிமுறையான (பொதுவுடைமைத்) தத்துவத்தைத் தவறவிடாமல் ஆள்பவனே தன்மானம் உடைய வீர அரசனுவான்.

"இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த
வகுத்தலும் வல்லது அரசு."

உரை :- அரசாங்கம் (பொதுவுடைமை) சட்டம் இயற்றி, உற்பத்தியைப் பெருக்கிச் சேகரித்த செல்வத்தைத் தனிப்பட்டவன் தனக்கே எல்லாம் என்று கொள்ளை யடித்துக்கொண்டு போகாமல் பாதுகாத்து, எல்லோருக்கும் எல்லாமாய்ப் பகிர்ந்து கொடுக்கும் வல்லமை உடையவன்தான் சிறந்த அரசனுவான்.

"முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு
இறை என்று வைக்கப் படும்."

உரை :- முறையான (பொதுவுடைமை) சட்டதிட்டங்களில் கண்டுள்ளபடி செயலாற்றி, எல்லா மக்களையும் சரிநிகர் சமானமாகக் காப்பாற்றி, ஆளும் அரசனே மக்கள் தலைவனுக வைத்திருக்கப்படுவான்! (அல்லாது, தனிவுடைமைக் கொடுங்கோலாட்சி புரிபவனை, மக்கள் சக்தி திரண்டெழுந்து அழித்துவிட வேண்டும்!!)

"கொடை அளி செங்கோல் குடியோம்பல் நான்கும்
உடையானும் வேந்தர்க்கு ஒளி."

உரை :- ஈகை, இரக்கம், நீதி, குடிமக்களுக்குப் பொதுவுடைமைமுறை வழங்கிச் சமத்துவமாகக் காத்தல் ஆகிய நான்கும் உடைய அரசனே அரசர்க்கெல்லாம் சிறந்த வழிகாட்டும் ஒளியாவான்.

இனி, மேலும் மேலும், விவரித்துக் கவனித்துக்கொண்டே போகப் போக இச்சிறு முகவுரை நூல், மாபெரும் வழிநூலாக ஆகிவிடும்! ஆதலால், இத்துடன் இதை முடிப்போமாக!! இதன் தொடர்ச்சியான "**திருக்குறள் திருவுரை**" எனும் நூலும் வெளிவரும் வாய்ப்புக் கிடைக்கும்போது, ஆயிரத்து முந்நூற்று முப்பது குறளடிகளுக்கும் உரிய அருமையும், பெருமையும் வாய்ந்த பகுத்தறிவுப் பதவுரைகளைப் பகர்வோமாக!!!

அன்பு

S. D. விவேகி.

ஆசிரியர் **'விவேகி'** அவர்கள்

எழுதிய நூல்களின் விவரம் :-

1.	திராவிடமும் ஆரியமும்	விலை	ரூ.	0	5	0
2.	நாம் யார்?	,,	,,	0	8	0
3.	கனவில் கண்ட கவி	,,	,,	0	10	0
4.	ஐக்கிய திராவிடம்	,,	,,	0	12	0
5.	கடவுள் உண்டா இல்லையா?	,,	,,	0	[illegible]	0
6.	இயற்கை இறைவனா?	,,	,,	0	12	0
7.	நாஸ்திகம் நல்லதா கெட்டதா?	,,	,,	0	6	0
8	திராவிட பூபதி	,,	,,	2	0	0
*9.	வேதங்களின் வண்டவாளம்	,,	,,	2	0	0
10.	நரகத்தில் நாயன்!	,,	,,	1	8	0
11.	உலக வாழ்வு	,,	,,	1	0	0
12.	திருக்குறளின் குறிக்கோள்!	,,	,,	0	12	0

விவரங்களுக்கு :-

திராவிட கலா நிலையம்,

57, முக்தாருனிஸா பேகம் தெரு,

சென்னை-2.

* இந்நூல் அரசாங்கத்தாரால் தடை விதிக்கப்பட்டுள்ளது.

எமது மகத்தான அடுத்த வெளியீடு !

ஆசிரியர் 'விவேகி' அவர்களின்

ஆராய்ச்சி மிகுந்த

அரிய பெரிய நூல்

'திருக்குறள்'

திருவுரை.

வெளியிடுவோர்

திராவிட கலா நிலையம்,

57, முக்தாருனிஸா பேகம் தெரு,

சென்னை-2.

...ted at 'Ganan Press,' Ellis Road, Mount Road, Madras-2. C. 1000

T2 R